- இராணுவ நடவடிக்கையின் போது தன்னுயிரையும் மதியாது சங்கச் சொத்துக்களைப் பாதுகாத்த தலைவர் இவர்.
- மக்கள் இடம்பெயர்ந்தபோது மக்கள் தற்காலிகமாக வாழ்ந்த இடங்களில் எல்லாம் சங்கக் கிளைகளை நிறுவி மக்களுக்கு உதவி செய்து பணியாளர்களையும் காத்து சங்கத்தையும் காத்த தலைவர் இவர்.
- யாழ். மாவட்டத்திலேயே எமது சங்கம் முதன்மையுடையதாக விளங்கச் செய்து பணியாளர்களைப் பெருமைபெற வைத்த தலைவர் இவர்.
- கடந்த மே மாதம் நடைபெற்ற போர் நெருக்கடி காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், எரிபொருளையும் காங்கேசன்துறை களஞ்சியத்திலிருந்து கொண்டுவர முடியாதிருந்த வேளையில் தானே பொறுப்பெடுத்து ஷெல் வீச்சையும் பொருட்படுத்தாமல் சென்று, கொண்டு வந்து மக்கள் துயர் தீர்த்த மகத்தான தலைவரிவர்.
- எரிபொருளை வடமராட்சி, தீவுப்பகுதிகளுக்கு கொண்டு போக முடியாதிருந்த போது அவற்றை எமது சங்கத்தில் வைத்து வழங்கி அவர்களுக்கும் சேவை செய்த தலைவர் இவர்.
- கூட்டுறவுத் துறையில் மட்டுமன்றி பிரசைகள் குழு, வலி.வடக்கு செஞ்சிலுவைச் சங்கம் முதலான பல்வேறு சமூக சேவை நிறுவனங்களிலும் பொறுப்பான பதவிகளில் இருந்து நெருக்கடிக் காலத்தில் பெரும்பணி செய்த தலைவர் இவர்.
- வலி வடக்கில் மட்டுமன்றி நாடளாவிய மட்டத்தில் தன் சேவையின் மூலம் நன்கறியப்பட்ட செயல் வீரம் மிக்க தலைவரிவர்.
- எவரும் எந்த நேரத்திலும் சந்தித்து உதவி பெறக்கூடிய மனிதநேயம் மிக்க தலைவரிவர்.
- மக்கள் சேவைக்காகவே தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கும் பெருமைக்குரிய தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராய் இருக்கும் எங்கள் தலைவர் சின்னத்தம்பி சிவமகாராசா அவர்களையே நாம் ஆதரிப்போம். நீங்களும் அவரையே ஆதரிக்க வேண்டுகின்றோம்.
- எங்கள் பிறப்புரிமையான பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்துக்கும் விருப்பு வாக்குகளை தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் இலக்கம் 11இற்கும் புள்ளடியிடுவதன் மூலம் எங்கள் தலைவரை நாடாளுமன்றம் அனுப்பி வைப்போம் எங்கள் தமிழர் பிரதேசத்தையும் கூட்டுறவையும் வளம்படுத்துவோம்.

*தெல்லிப்பழை.*

**தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள்**

தமிழர் விடுதலைக் கூட்டணி X

1 2 3 4 5 6 7 8 9 10

~~11~~ 12

(79229)





*இதோ விடுதியைப் பாருங்கள்....*

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரி விடுதியை மிகத் திறம்பட கட்டி முடிக்க வைத்த மதிப்புக்குரிய டாக்டர் திரு.சி.இராசலிங்கம் அவர்களை அச்சு வேலி வாழ் மக்களும், லாலா சோப் ஸ்தாபனத்தாரும் மிகவும் பாராட்டு கிறார்கள்.

லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(C/13297)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000



தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாய் இருப்பதற்கும் தமிழ் மக்களின் அவலங்களை அரசியல் இலாபத்திற்கு பயன்படுத்துவதற்கு எதிராக குரல் கொடுக்கவும் சட்டத்தரணியும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானுமாகிய

**க.சி.பாலகிருஷ்ணன** J.P.U.M

*அவர்களை ஆதரியுங்கள்*



க.சி.பாலகிருஷ்னன்
இல.4

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | ~~4~~ | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

*வடமராட்சி மக்கள்*

(79236)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

யாழ் மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் இளம் பத்திரிகையாளர் எஸ்.ஸ்ரீகஜன்னை ஆதரித்து வெற்றிபெறச்செய்வோம்.

- யுத்தம் நிறுத்தப்படவேண்டுமானால் ஆட்சி மாற்றம் வேண்டும்.
- விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவேண்டுமானால் ஆட்சி மாற்றம் வேண்டும்.
- செம்மணி, மடுதேவாலய படுகொலைகள் நிறுத்தப்படல் வேண்டுமானால் ஆட்சி மாற வேண்டும்.

இத்தகைய ஆட்சி மாற்றத்திற்கு இளம் பத்திரிகையாளரை பெரும் வெற்றி பெறச் செய்வோம்.

| ஐக்கிய தேசியக் கட்சி | | X |
|---|---|---|

இலக்கம் ~~8~~

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ~~8~~ | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |



எஸ்.ஶ்ரீகஜன்
(பத்திரிகையாளர்)

*(இளம் பத்திரிகையாளரை நாடாளுமன்றம் அனுப்புவோம்)*

**நல்லூர் தொகுதி மக்கள்**

(79250)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

**'ஶ்ரீகஜன் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்'**

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எமது பத்திரிகை நண்பணான எஸ்.ஶ்ரீகஜன் போட்டியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அவர் பெரும் வெற்றி பெற நாம் வாழ்த்துகின்றோம். எமது நண்பன் ஶ்ரீகஜனை வெற்றி பெறச் செய்வதற்கு யானைச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு அவரின் இலக்கமான 8க்கு நேராகவும் புள்ளடியிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திரிகைத்துறை நண்பர்கள்

| ஐக்கிய தேசியக் கட்சி | | X |
|---|---|---|

**இலக்கம் ~~8~~**




எஸ்.ஶ்ரீகஜன்
(ஐ.பி.சி.ஆஞ்சனேயர் - பத்திரிகையாளர்)

*ஶ்ரீகஜனை பெரும் வெற்றி பெறச் செய்வோம்*

(79249)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000



வீ.ஆனந்தசங்கரி
இல.2
கூட்டணியின்
சிரேஷ்ட துணைத்
தலைவரும்
முதன்மை
வேட்பாளரும்.

தலைவர் சிவாவின் மண்ணிலிருந்து வளரும்
இளைய தலைமுறையின் தலைவன்
சண்முகராஜா அரவிந்தன் அவர்களையும்,
கூட்டணியின் முதன்மை வேட்பாளர்
திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்களையும்
ஆதரித்து நாடாளுமன்றம் அனுப்பிவைப்போம்.



ச.அரவிந்தன்
இல. 1
கூட்டணியின்
மத்தியகுழு
உறுப்பினரும்,
யாழ்.மாநகரசபை
உறுப்பினரும்.

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| ~~1~~ | ~~2~~ | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

(C/13312)


### ரெலோ முதன்மை வேட்பாளர் கூறுகிறார்

# 6 மாதத்துக்குள் புலிகளையும் அரசையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவருவோம்

## இதில் தவறினால் எம்.பி.பதவியைத் துறக்கத் தயார்

யாழ்ப்பாணம்,ஒக்.9

அடுத்த ஆறு மாத காலத்துக்குள் போரை நிறுத்துவதிலும், விடுதலைப்புலிகளையும் அரசையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதிலும் வெற்றி காண முடியும் என்று நம்பகிறோம். இதனைச் செய்ய முடியவில்லையென்றால், ஆறு மாதம் முடிவில் நாடாளுமன்றத்துக்கு நாம் முழுக்குப் போடுவோம். அதன் பின்பு நாம் என்ன செய்ய இருக்கின்றோம் என்பதை பகிரங்கமாக இலங்கை அரசுக்கும் வெளி உலகத்துக்கும் தெரியப்படுத்துவோம்.

இவ்வாறு ரெலோ ஆதரவு சுயேச்சைக் குழு முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

ரெலோ அலுவலகத்தில் நேற்றுப்பிற்பகல் 2.00 மணியளவில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது இனத்தைப் பொறுத்த வரை ஐ.தே.க. சரி சந்திரிகா அரசு சரி இரண்டும் ஒன்றுதான். தமிழர்களை அழித்து ஒழிப்பதில் இவை இரண்டும் போட்டியிட்டு வருகின்றன. சந்திரிகா அரசை ஆதரிக்கும் ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளும் வரதர் தலைமையிலான சுயேச்சைக் குழுவும், வேல்முருகு தங்கராசா தலைமையிலான சுயேச்சைக் குழுவும் சிங்களக் கட்சிகளை விட படுமோசமானவை. எதிரிகளை எம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் துரோகிகளை மன்னிக்க முடியாது. சுத்தத் தமிழர்கள் எவரும் அரசாங்கத்தை ஆதரிக்கும் எவருக்கும் வாக்களிக்கக் கூடாது.

சந்திரிகா அரசுடன் கூட்டணி கள்ள உறவு கொண்டுள்ளது. தமிழ் இனத்தை நாசமாக்கும் சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டத்தை தயாரித்துக் கொடுத்தவரே கூட்டணியின் காலஞ்சென்ற நீலன் திருச்செல்வம் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. நீலனின் மறைவுக்கு பின் சந்திரிகாவின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்பவர் கூட்டணியின் செயலாளர் சம்பந்தனே. கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரத்தை இன்று ஓரங்கட்டி விட்டனர். விரக்தியடைந்த நிலையில் வேதனையுடன் அவர் ஒதுங்கி வாழ்கிறார்.

தமிழ்க் காங்கிரஸைப் பொறுத்த வரை குமார் பொன்னம்பலம் உயிருடன் இருந்திருந்தால் அவருடன் இணைந்து நாம் செயற்பட்டிருப்போம்.

எம்முடன் இணைந்து கூட்டணி அமைக்குமாறு மாமனிதர் குமாரின் மறைவுக்குப் பின்னர் அவரின் வீட்டில் வைத்து காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி மற்றும் தலைவர்களைக் கேட்டோம். தனிப்பட்ட முறையில் அவர்கள் விரும்பினாலும் குமாரின் குடும்பத்தினரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு பின்னர் மறுத்து விட்டனர்.

எமது அணியில் தமிழரசுக் கட்சியிலும் கூட்டணியிலும் நீண்ட காலமாகவிருந்த யாழ். துணைமேயர் அலோசியஸ், டாக்டர் கே.சுப்பையா, வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் சிவாஜிலிங்கம் ஆகியோர் இணைந்துள்ளனர். எமது அணிக்கு ரெலோ ஆதரவளிக்கின்ற போதும் இது ரெலோ அணியல்ல. ரெலோவைச் சேர்ந்தவர்களும் வேட்பாளர் பட்டியலில் உள்ளனர். அவ்வளவு தான்.

தேர்தல் தினத்தன்று சுமார் 25 ஆயிரம் கள்ளவாக்குகளைப் போடும் முஸ்தீபில் ஈ.பி.டி.பி. கட்சியினர் ஈடுபட்டுள்ளனர் என்று நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. வேறு சில கட்சிகளுக்கும் கூட இந்த விடயம் தெரியும். தமது கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதிகள், மானிப்பாய், வட்டுக்கோட்டை, நல்லூர், கோப்பாய் தொகுதிகளில் இவர்கள் கள்ளவாக்குப் போடுவதற்குத் தயாராகவுள்ளனர்.

தமிழ் மக்களின் சுதந்திர அபிலாசைகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் மிகப்பெரும் சவாலாக டக்ளஸ் தேவானந்தா இருந்து வருகிறார். யாழ். மாவட்டத்தில் சந்திரிகா சார்பில் டக்ளஸே அரசாங்கம் நடத்திக்கொண்டிருக்கிறார். நெடுந்தீவில் சந்திரிகா அரசின் சாயலே கிடையாது. ஈ.பி.டி.பி. துப்பாக்கி நபர்களே அந்தத் தீவை ஆள்கின்றனர்.

இந்தப் பயங்கர நிலைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்றால் தமிழ் மக்கள் அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பு நிலையத்தக்கு நேரத்தக்குச் செல்ல வேண்டும். சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளை எதிர்த்து நாங்கள் இந்தக் களத்தில் நிற்கிறோம். சகல வழிகளிலும் இவர்களை எதிர்த்து நிற்கும் துணிவும் ஆற்றலும் பலமும் எமது அணிக்கு மட்டுமே உண்டு. நேர்மையானவர்களை எமது அணியில் நிறுத்தியுள்ளோம் - என்றார். (இ-9)

# இரு சபைகள் கொண்ட நாடாளுமன்றம்; மூன்று மட்டங்களில் அதிகாரப் பரவல்

## லிபரல் கட்சி முன்வைக்கும் மாற்றங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்9

★ மக்கள் பிரதிநிதிகள் சபையும், மேல் சபையும் (செனட்) கொண்ட நாடாளுமன்ற முறை கொண்டுவரப்பட வேண்டும்.

★ தொகுதி ரீதியான தேசியப் பட்டியலும், விகிதாசார முறையிலான தேர்வும் கொண்ட (ஜேர்மனியில் உள்ளது போன்று) தேர்தல் முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

★ மாகாண அடிப்படையில் மேல் சபைக்கு தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

★ நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் 4 வருடங்களாகக் குறைக்கப்படவேண்டும்.

லிபரல் கட்சியின் கொள்கை விளக்கத்தில் மேற்கண்ட அம்சங்களும் உள்ளடக்கப்பட்டள்ளன.

அக்கட்சியினால் முன்வைக்கப் பட்டுள்ள ஏனைய பிரதான அம்சங்கள் வருமாறு:-

★ அதிகாரப்பரவலாக்கலுக்கான இரு பிரதான காரணங்கள் உள்ளன. முதலாவது மத்திய திட்டத்திலும் உள்ளூர் தேவைகளிலும் கவனமெடுக்காது முடிவு எடுத்தலிலும் தங்கியிராது பல பகுதிகளிலும் உள்நாட்டிலே திறமையானதும் நல்லறிந்ததுமான நிர்வாகத்தை அளித்தலாகும்.

இரண்டாவது, நாளாந்தம் தங்கள் வாழ்க்கையில் பாவிக்கும் நடைமுறைகளிலான கொள்கைளில் தங்களுக்கு அதிகாரமுள்ளதென மக்களிடம் ஓர் உணர்வு ஏற்படுவதை உறுதி செய்யவேண்டும். தற்போதைய அதிகாரப் பரவாலாக்கல் இத்தகைய தன்மைகளில் தவறிவிட்டது.

★ அரசாங்கத்தின் செயற்பாடுகள் 3 தெளிவான பட்டியலில் இருக்கவேண்டும். முதலாவது உள்ளூராட்சி அரசாங்க நிறுவனங்கள் இரண்டாவது மாகாண அரசாங்கம், மூன்றாவது மத்திய அரசாங்கம். நிர்வாகப் பொறுப்புகள் பிரதேச சபைகள் அல்லது அதிலும் சிறிய அலகுகள் போன்ற உள்ளூர் நிறுவனங்களுக்கும் பரவலாக்கப்படவேண்டும். சமூக, பொருளாதார கொள்கைகள் மாகாண அரசாங்கத்தின் கீழ் வரும் என்பதுடன் மத்திய அரசாங்கம் பாதுகாப்பு,நிதி, நீதி ஏனைய அடிப்படை தேவைகளுக்கும் உரிமைகளுக்கும் பொறுப்பாக இருக்கவேண்டும்.

★ மக்களால் தெரிந்தெடுக்கப்படும் ஆளுநர் ஒருவருடன் மாகாண நிறைவேற்று அதிகாரம் கொடுக்கப்படல் வேண்டும். ஆளுநர் மட்டுப்படுத்தப்பட்ட பரப்புகளில் அமைச்சர்களை நியமிக்க வேண்டும்.

★ ஒரேயொரு தடவை மீள் தேர்தலுக்கு நிற்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாக ஜனாதிபதியின் பதவிக் காலம் 4 வருடங்களுக்குக் குறைக்கப்படவேண்டும்.

★ அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கை குறைக்கப்படல் வேண்டும். ஜனாதிபதி செய்யும் இந்த நியமனங்கள் பிரதிநிதிகள் சபையால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். (அ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேசுங்கள் என்று கூறுவோர் நாடாளுமன்று செல்லத் தேவை இல்லை

## புளொட் அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோருவோர் நாடாளுமன்றம் செல்லத் தேவை இல்லை. ஏனெனில் புலிகளுடன் பேசும்படி நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை. அத்துடன் புலிகளின் தலைவரினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை இலங்கை நாடாளுமன்றத்தின் தலைமைகளால் ஒருபோதும் உருவாக்க முடியாது.

மேற்கண்டவாறு புளொட் அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் சிந்தனைக்கு" என்ற தலைப்பில் புளொட் அமைப்பு விடுத்த பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இதுவரைநாளும் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களை நோக்கினால் புலிகளுடன் பேசுங்கள் என்று வலியுறுத்தவே நாம் நாடாளுமன்றம் செல்லவேண்டியுள்ளது என்று ஒரு சாராரும் -

யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அரசியல் தீர்வு நடவடிக்கைகளுக்காகவும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காகவும், நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றிட வேண்டும் என்று மற்றொரு சாராருமாக இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் தமிழர் தரப்பிடமிருந்து வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

புலிகளுடன் பேசுங்கள் என்று கோரும் எவரும் நாடாளுமன்றம் செல்லவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இவர்கள் சொல்லிப் புலிகள் பேசியதாக இதுவரையில் வரலாறு இல்லை. அதேநேரத்தில் இந்த அமைப்புக்களால் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில்கூட ஒரு சிறு மாற்றத்தைக்கூட ஏற்படுத்திவிட முடியாது.

புலிகளின் தலைவரினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை இலங்கை நாடாளுமன்றத் தலைமைகளால் எக்காலத்திலும் உருவாக்க முடியாது என்கின்ற திடமான நம்பிக்கையுடனேயே இந்த அமைப்புக்கள் புலிகளின் முதுகில் சவாரி செய்து தமது அரசியல் பயணத்தை நடத்தத் தயாராகின்றன என்பது சகலரும் அறிந்த உண்மை.

எனவே இவ்வாறான அமைப்புக்களை நாளை இடம்பெறும் தேர்தலில் நிராகரிக்க வேண்டியதே உங்களது முதல் தீர்மானமாக இருக்க வேண்டும்.

நாடாளுமன்ற வரையறைக்குள் நின்று செயலாற்றக்கூடிய விவகாரங்களில் நாம் மிகவும் தெளிவான, உறுதியான தொலை நோக்குடனான நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் கொண்டிருந்ததை கடந்த நாடாளுமன்றத்தில் நாம் பிரதிநிதித்துவப்படுத்திய வன்னி மாவட்டத்தின் இன்றைய நிலையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியும்.

வன்னி மாவட்டத் தமிழர்கள் வாக்குகளை சிதறடிக்காது எம்மை ஆதரித்திருந்தமையும் அதன் காரணமாக எமக்குக் கிடைத்த உறுதியான பிரதிநிதித்துவமுமே இதற்குக் காரணமாகும். - என்று உள்ளது.(இ-7)


எமது இன்றைய வீடியோ CD வெளியீடு

பிறேம், குஷ்பு நடித்த

* குரோதம்

திரையரங்குகளுக்கு முன்னுரிமை,

பிரதிகளை 11.00 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(C/13311)

கஜரி வீடியோ விஷன்

பஸ் நிலையம், அச்சுவேலி.


## வாக்காளர் அட்டை எடுத்துவர விசேட பஸ் சேவை

காரைநகர் வாக்காளர்களில் இதுவரை வாக்காளர் அட்டைகளைப் பெறாதவர்கள்,காரைநகர் சென்று அவற்றைப் பெற வசதியாக இன்று காலை 7மணி முதல் விசேட பஸ் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தர் மடத்திலுள்ள ஐ.தே.க. அலுவலகத்தில் இருந்து இந்தச் சேவை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சாவகச்சேரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுவது தெரிந்ததே.

சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் இராஜநாயகமும் தாமும் உட்பட ஏழு வர்த்தகர்களைக் கொண்ட குழு நேற்று இது தொடர்பாக 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்க, பிரிகேடியர் செனவீர, மேஜர் விஜயவிக்கிரம ஆகியோரைச் சந்தித்துப் பேசியதாக அவர் கூறினார்.

நாளை மறுதினம் புதன்கிழமை முதல் தினசரி 15 பேர் என்ற அடிப்படையில் காலை 7 மணிக்கு சாவகச்சேரி நகருக்குச் சென்று தமது பொருள்களை எடுத்துக் கொண்டு மாலை 5 மணிக்கு முதல் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும்-

அவர்கள் தம்முடன் ஒரு பஸ், ஒரு லொறி ஆகியவற்றை நகருக்கு எடுத்துச் செல்ல முடியும் என்றும்-

அங்குள்ள உடைமைகளை அதற்கு உரியவர்களே எடுத்து வருவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுடன் வணிகர் கழகத் தலைவர் இராஜநாயகமும் உடன் செல்வார் என்றும் -

தி.மகேஸ்வரன் உதயனுக்கு மேலும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் சாவகச்சேரி நகருக்குச் செல்லும் முதல் அணியில் தாமும் இடம்பெறுவார் என்றும்-

வர்த்தகர்கள் பொருள்களை எடுத்து வருவதற்காக தமது ஐ.தே. கட்சியின் சார்பில் தாம் லொறிகளைக் கொடுத்து உதவ இருப்பதாகவும் - அவர் மேலும் சொன்னார். (உ-7)

## அழைப்பு

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவில் பணியாற்றத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர்ப் பிரதிநிதிகளை பிரதம கண்காணிப்பாளர்கள், உதவிக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரைச் சந்திக்க இன்று பி.ப. 4.00 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் வைத்து இவர்களின் கடமை தொடர்பான அறிவுறுத்தலும், நியமனக் கடிதமும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தாக்கவில்லை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால் தனிப்பட்ட முறையில் -

ஒலிபெருக்கி மூலமாக -

தகாத வார்த்தைகளால் தூஷித்துக்கொண்டிருந்தனர்.

அந்தச்சமயம் கூட்டணியின் பிரசாரகரும் யாழ்.மாநகரசபையின் உறுப்பினருமான விஜயரட்ணத்தை நான் சென்று விசாரித்தேன். அப்போது அவர் "இன்றுடன்(7-10-2000) பிரசாரம் முடிவடைவதால் யாழ்.வர்த்தகநிலையங்களுக்கு முன்பாக ஒலிபெருக்கி மூலமாக மகேஸ்வரனைத் தனிப்பட்டமுறையில் தூஷிக்குமாறு கூட்டணியின் சிரேஷ்ட துணைத்தலைவர் ஆனந்தசங்கரி எனக்கு பணித்தார்."- எனக்குறிப்பிட்டார்.

இதனை அடுத்து விஜயரட்ணத்துடன் நான் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டேன்.ஆனால் அவர் மீது தாக்குதல் நடத்தவில்லை. அச்சமயம் விஜயரட்ணம் மதுபோதையில் இருந்தார் - இவ்வாறு தி.மகேஸ்வரன் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (அ-7)

## ஐ.தே.கட்சியின் வேட்பாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.9

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்கு மோசடிகளில் ஈடுபட சில தமிழ்க் கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது என ஐ.தே.கவின் யாழ்.முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்காக சகல வாக்குச் சாவடிகள் மற்றும் அதனை அண்டியுள்ள வீதிகள்,வாகனப் போக்குவரத்துக்கள் என்பன வீடியோப்படம் பிடிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாக்குகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் -

குந்தகமான சூழ்நிலை ஏற்படாதிருக்குமானால் இடமாற்றம் தேவைப்படாது என்றும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளதாக அரசியல் கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ-3)

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க 16 ஆயிரம் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாடெங்கும் கடமையில் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)


## விசேட அபிஷேகம்

காரைநகர் மணற்காடு கும்பநாயகி அம்மன் ஆலயத்தில் நாளை (10-10-2000) காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் மற்றும் அன்னதானம் என்பன இடம்பெற வுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உபயகாரர்

யாழ்ப்பாணம் (C/13314) மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்



எனது பாசத்துக்குரிய யாழ் மக்களே!

ஈ.பி.டி.பி.யின் அன்பு வணக்கங்கள் உங்களுக்கு!

கடந்த காலங்களில் நீங்கள் எம்மோடு நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பாருங்கள்!

நீண்ட காலமாகவே யுத்த அவலங்களையே சுமந்து வந்தவர்கள் நீங்கள். 1995 இன் இறுதியில் மாபெரும் யுத்தத்தை எதிர்கொண்டீர்கள். இழப்புக்களைச் சுமந்து உங்கள் உறவுகளை இழந்து, மாபெரும் இடப்பெயர்வையும் சந்தித்தீர்கள். சிறுகச்சிறுகச் சேமித்துக் கட்டிக் காத்தவையெல்லாம் நொடிப்பொழுதில் நொருங்கிப் போன காலம் அது.

இழப்பதற்கு எதுவும் இல்லையென நீங்கள் மீண்டும் வலிகாமத்திற்குள் கால் பதித்தது முதல் உங்களை நாங்கள் பார்த்தோம். எங்களை நீங்கள் பார்த்தீர்கள். அன்றுமுதல் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜனநாயக வழியில் உங்களுடன் உங்களுக்காகப் பணியாற்றத் தொடங்கியிருந்தோம்.

அன்று......

யுத்தம் சீரழித்த உங்கள் நகரங்கள், கிராமங்களில் மின்சாரம், தொலைபேசி எதுவும் கிடையாது. கல்வி வசதிகள் மிகவும் முடக்கப்பட்டுக் கிடந்தன. சுகாதார வசதிகள்-ஆஸ்பத்திரி வசதிகள்-யாவும் ஆபத்துக்கும் கைகொடுக்கவில்லை. உள்ளூர், வெளியூர்ப் போக்குவரத்துக்கள் எதுவும் கிடையாது!

நிம்மதியாக உங்கள் வீடுகளில் இருந்தால் போதும் என்ற ஏக்கத்துடன் வந்த உங்களுக்கு உங்கள் வீட்டுக்கதவைத் திறக்கவே அச்சம்! பாதுகாப்புப் படையினரின் அச்சம் தரும் நடவடிக்கைகள், கைதுகள், காணாமல் போதல், பிற ஆயுதம் தாங்கிய குழுக்கள் அரசியல் கட்சி வேடத்தில் மீண்டும் தங்களது அராஜகங்களைக் கட்டவிழ்த்துவிடக் கங்கணம் கட்டிய நேரம்....

இக்காலச்சூழலில் உங்களுக்கு உங்கள் சொந்த மண்ணில் சொந்த வீட்டில் வாழ நம்பிக்கை ஊட்டி இன்றுள்ள நிலைக்கு மாற்றியவர்கள் ஈ.பி.டி.பி.யினரே என்பதில் பெருமையடைகின்றேன்.

இன்று போக்குவரத்து, தொலைத் தொடர்பு மீளக் கட்டியெழுப்பப்பட்டுவிட்டது. கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் நாம் விசேட கவனமெடுத்து இயன்றவரை இக்குறுகிய காலப்பகுதியில் மீளக்கட்டியெழுப்பியுள்ளோம். அரச படைகளினால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களுக்கு நீதி கேட்க காணாமல் போனவர்களின் பெற்றோர்களைக் கொண்டு சங்கம் அமைத்தோம். இதன் மூலம் காணாமல் போனவர்களுக்கு நீதிகேட்டும் போராடிக்கொண்டு வருவதுடன், எதிர்வரும் காலங்களில் வகை தொகையற்ற கைதுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். எமது உறுதியான, அப்பழுக்கற்ற அரசியல் செயல்பாட்டினால் படையினரின் அநாவசியக் கெடுபிடிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதை நீங்களும் அனுபவத்தால் அறிவீர்கள்! இதை விடுத்து குந்தியிருந்து குதர்க்கம் பேசி உங்கள் துயரங்களில் சுயநல அரசியல் நடத்திக் கூத்தாடவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறே ஆயுதம் தாங்கிய குழுக்களின் கப்பம், வரிவசூலிப்பு, மர்மக் கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற அராஜக நடவடிக்கைகளுக்கும் இடம் அளிக்காத ஜனநாயகச் சூழலைத் தோற்றுவித்ததில் ஈ.பி.டி.பி.யினராகிய நாம் பெருமையடைகின்றோம்.

உங்களது துன்பதுயரங்களைத் துடைத்தெறிந்து கௌரவமாக நீங்கள் வாழ்வதற்கென உங்கள் மண்ணில் 1990இல் சிறு விதையென எங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் ஊன்றப்பட்ட ஈ.பி.டி.பி., இன்று உங்களிடையே தமிழ்ப்பேசும் தேசமெங்கும் கிளையெறிந்து, விழுதெறிந்து பெருவிருட்சமாக மாறிவிட்டதை நீங்கள் அறிவீர்கள்.

1994இல் எமக்குக் கிடைத்த ஒன்பது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தினாலும், 1998இல் எமக்கு நீங்கள் அளித்துள்ள பத்துப்பிரதேச சபைகளின் நிர்வாக அதிகாரத்தினாலும் யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு செயற்பாட்டில் இதுவரை கால அரசியல் வரலாற்றில் எவரும் ஆற்றியிராத அளவிற்கு செயற்பட்டிருக்கின்றோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

உங்களுக்கான சேவையினை மேலும் முன்னெடுத்துச் செல்லும் பணியில் இன்று குடாநாட்டில் சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, திருநெல்வேலி, தீவகம் உட்பட பதின்னான்கு இடங்களில் ஈ.பி.டி.பி.யின் கிளைச் செயலகங்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றோம். அர்ப்பணிப்பும் விசுவாசமும் உள்ள தோழர்களை உருவாக்கி வைத்திருக்கும் நாம், மரண அச்சுறுத்தலையும் மீறி சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் உங்கள் சேவையே எங்கள் சேவையாக எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழி நடத்தலில் பணியாற்றி வருகின்றோம்.

தொடரும் ஜனநாயக மறுப்புச் சூழலில் உங்களுக்கான சேவையில் நாம் நாற்பதிற்கும் மேற்பட்ட தோழர்களை அநியாயமாகப் பலி கொடுத்தும் உங்களுக்குரிய சேவைகளைப் புறந்தள்ளி விட்டு ஓடி ஒளிந்து கொள்ளவில்லை! பதவி ஆசைகளுக்காக ஏனையவர்களைப் போல் கதிரைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. துவண்டு போகாது, தொடர்ந்தும் உங்களுக்கு நிரந்தரச் சமாதானத்தையும் நிம்மதியான வாழ்வையும் உருவாக்கும் பணியில் அயராது போராடி வருகின்றோம். வெற்றியின் இலக்குகளைத் தொட்டுக்கொள்ள நீங்களும் எங்களுடன் தோள் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்! ஈ.பி.டி.பி.யின் கரங்களைப் பலப்படுத்துங்கள்! உங்கள் பொன்னான வாக்குகளை வீணைச் சின்னத்துக்கு அளியுங்கள்!


மக்கள் சேவையிலுள்ள,

கே.வி.குகேந்திரன (வி.கே.ஜெகன்)

யாழ்.மாவட்ட அமைப்பாளர்,

ஈ.பி.டி.பி.

09.10.2000.



X

வீணைச் சின்னத்திற்கு வாக்களித்திடுங்கள்!

(78937)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன்

## நாளைய தேர்தல்

மன்னர் ஆட்சி நிலவிய காலங்களில் ஆண்டான் அடிமை நிலை மேலோங்கி இருந்தது. அந்த ஆட்சிமுறையின் பல குறைபாடுகளை நீக்குவதற்கான சிறந்த மருந்தெனக் கண்டே ஜனநாயகம் உலகளாவிய ரீதியில் அறிமுகமானது. ஆனால் உண்மையான ஜனநாயகம் உலகின் பல நாடுகளில் இப்போது இல்லை. குறிப்பிட்ட ஒரு சிலரின் வட்டத்துக்குள்ளேயே ஆட்சி அதிகாரம் அகப்பட்டு மக்களின் சுதந்திரம் கேள்விக்கு உரியதாகி உள்ளது.

மக்கள் நலன்களைக் கவனிக்கவும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் என ஆளும் சபைக்குச் செல்லும் மக்கள் பிரதிநிதிகள் எனச்சொல்லப்படுவோர் மக்களை மறந்து தமதும் தம்மைச் சேர்ந்தோரதும் சுயநலன்களை நாடி உழைப்பவர்களாகவே இருக்கிறார்கள். மக்கள் நாயகர்களாக விளங்க வேண்டியவர்கள் சுயநல நாயகர்களாக மாறி உள்ளார்கள். இலங்கை அரசியலும் அதற்கு விலக்கானதல்ல.

எனினும் இலங்கையில்; சதிப் புரட்சி, இராணுவப் புரட்சி, ஆட்சிக் கவிழ்ப்பு என்று எதுவுமில்லாமல் உரிய காலங்களில் பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன; அவை மூலம் ஆட்சி மாற்றங்கள் இடம் பெறுகின்றன. வெளித்தோற்றத்துக்கு-பெயரளவில்-இங்கு ஜனநாயகம் செயற்படுகிறது!

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் நாளை பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. ஜனநாயகத்தின் அடித்தளமான வாக்குரிமையைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு முறை மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்போகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகள் ஏனைய பகுதி வாழ் மக்களின் பிரச்சினைகளை விட வித்தியாசமானவை. அதன் காரணமாக வடக்கு—கிழக்கில் நடைபெறும் தேர்தலைப் பொதுவான பார்வைக்குள் அடக்க முடியாது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதியான சூழலில், நீதியான, வன்செயலற்ற. மோசடியற்ற தேர்தல் நடைபெறுமா என்பதில் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, அரசியல் கட்சிகளிடம் மட்டுமன்றி, தேர்தலைக் கண்காணிக்க உள்ளவர்களிடமும் அச்சம் தோன்றியுள்ளது. இதற்குக் காரணம் தேர்தலுக்கு முன்னர் எப்போதும் இல்லாதவாறு வன்செயல்கள் அதிகரித்துள்ளமையே.

நாளை நடைபெறும் தேர்தல், நீதியான தேர்தலாக நடைபெற்றால் மட்டுமே தென்னிலங்கை மக்களின் விருப்பப்படி அவர்களின் உண்மையான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். தமது பிரதிநிதியாக ஆட்சிமன்றம் செல்ல வேண்டியவர்கள் யார் என்பதனை வாக்காளப் பெருமக்களே முடிவு செய்வர்.

தெற்கில் எந்தக் கட்சிக்கும் அமோக வெற்றி கிடைக்கும் வாய்ப்பில்லை என்பது பொதுவான கணிப்பு—அமைதியான தில்லுமுல்லு இல்லாத வன்செயல்களற்ற நீதியான தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் தொங்கு நாடாளுமன்றமே அமையும் என்பது இன்னொரு ஊகம்.

இந்த ஊகங்கள் சரியாவதும் பிழையாவதும் மக்கள் கைகளிலேயே— அவர்கள் போடும் புள்ளடிகளிலேயே— தங்கியுள்ளது. அவர்களுக்கு அப்பாற்பட்ட தீயவர் கூட்டம், வாக்களிப்பு நிலையங்களை நெருங்காது இருப்பது உத்தரவாதம் செய்யப்படும் பட்சத்தில்!

# போராளிகள் ஐ. நா. படையில் ஊதியத்துடன் சேர்க்கப்படுவர்

## பிரஜைகள் முன்னணி வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஒக். 8

இலங்கையில் சமாதானம் ஏற்படும் பட்சத்தில் இங்கு கடமை ஆற்றும் ஐ. நாவின் சமாதானப்படையில் போராளிகளை ஊதியத்துடன் சேர்த்துக் கொள்ள முயற்சி மேத்கொள்வோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பஸ் சின்னத்தில் போட்டியிடும் பிரஜைகள் முன்னணியினர் இவ்வாறு தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளனர்.

தாம் வெற்றிபெற்றால் நிறைவேற்றுவதாக உறுதி அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளில் சில வருமாறு:

★ திருகோணமலையில் சுதந்திர வர்த்தக நிலையம், சர்வதேசப் பல்கலைக்கழகம் ஆகியன அமைக்கப்படும்.

★ வடக்கிலும் கிழக்கிலும் விருந்தினர் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும்.

★ வெளிநாடுகளின் உதவியுடன் தொழிற்சாலைகளும் 9 பல்கலைக்கழகங்களும் நிறுவப்படும்.

(இ-ஒ)

# உதயன்

## தேர்தல் சட்டங்களைமீறுவோரை கைது செய்யுமாறு உத்தரவு

நாளை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் தொடர்பான சட்டவிதிகளை மீறும் அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட எந்த அதிகாரம் வாய்ந்த அதிகாரிகளையும் கைது செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலீஸாரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுபவர்கள், தேர்தல் தொடர்பான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் நாட்டின் எந்தப் பகுதியில் வசித்தாலும் அவர்களை உடன் கைது செய்யுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

# புலிகளுடன் பேசித் தீர்வுகாண்பதை கூட்டணி தொடர்ந்து வற்புறுத்தும்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

**கடந்த 7ஆந் திகதி உரும்பிராயில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

1977 ஆம் ஆண்டு ஆறு ஆண்டுகளுக்கு எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்க ஜே. ஆர். அரசு தீர்மானித்தது. இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்தது. எதிர்க்கட்சி முதல்வராயிருந்த அ. அமிர்தலிங்கம் முதலான 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிகளைத் தூக்கி எறிந்தனர். அதன் பின் 23 ஆண்டுகளாகத் த. வி. கூட்டணி யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருக்கவில்லை.

1994 பொதுத்தேர்தலிலும் நாம் போட்டியிடவில்லை. அப்பொழுது தமிழ் மக்கள் வாக்களித்தார்களோ இல்லையோ ஒரு சில ஆயிரம் வாக்குகளால் யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்பது பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட செய்தியை அறிந்திருப்பீர்கள். அவர்கள் தான் ஈ. பி. டி. பி கட்சியின் பிரதிநிதிகளாயிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் ''இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்ட ஆனால் ஜே.ஆர். வஞ்சனையால் சீர்குலைக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது'' என்றார்.

1995 ஓகஸ்ட் 3 ஆம் நாள் ஒரு புதியதீர்வு யோசனையை முன்வைத்தார். 1. அதில் அரசின் ( Nature of state ) தன்மை ''பிராந்தியங்களின் ஒன்றியம்'' (Union- of Regions), 2. ''அரச காணிகள் பிராந்திய அரசுகளிடமே இருக்கும்'' 3. ''தமிழர் வாழ்விடப் பிரதேச எல்லைகள் திருத்தியமைக்கப்படும்' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன. இப்பிரேரணைகளை முன்னேற்ற முயற்சித்தோம்.

ஆனால் ஆறு ஆண்டுகள் ஆட்சியின் இறுதியில் 2000 ஓகஸ்ட் 18 ஆம் நாள் நாடாளுமன்றத்தில் முன் வைத்த பிரேரணைகளில் 'பிராந்தியங்களின் ஒன்றியம்'' என்பதும், 'பிராந்திய அரசுகளிடமே காணி அதிகாரம்'' இருக்கும் என்பதும் நீக்கப்பட்டுவிட்டது 'வடக்கையும் கிழக்கையும் இணைக்கவேண்டுமானால் கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்தப்படும். அல்லது கிழக்கு தனிப்பிராந்தியமாகும்' என்று அறிவிக்கப்பட்டது.

இப் பிரேரணை 'இனப் பிரச்சினைக்குத் தீர்வாகாது' 'புலிகளுடன் பேசுவதற்கு அடிப்படையாக இருக்காது' 'போரை நிறுத்தி அமைதி ஏற்படுத்துவதற்கு போதுமான தீர்வாக இல்லை' என்பதால் இதனை எதிர்த்தது த. வி. கூட்டணி.

'சமாதானத்திற்கான போர்' என்று கூறிக்கொண்டு பாரிய நவீன யுத்த தளபாடங்களை வாங்கிக் குவித்து எங்களினமும், தமிழ் நிலங்களும், தமிழர் பொருளாதாரமும் அழிக்கப்படும் வகையில் போரைத் தீவிரப்படுத்தி வரும் அரசு என்பதாலும், இது வரையில் 60,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், ஒன்பது லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டும் எஞ்சியிருக்கின்ற தமிழர்களும் அடுத்த கணம் உயிருக்கு உத்தரவாதமில்லையென்று அஞ்சி அஞ்சிச் சாகும் நிலையில் வீழ்ந்து கிடப்பதாலும் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வை நிலைநாட்டாமல் போரை முன்னெடுத்துச் செல்வதாலும், போரின் வெற்றிகளைக் கொண்டு தென்னிலங்கையில் தேர்தல் வெற்றிகளைப்பெற முயற்சிப்பதாலும் இந்த அரசையும் மாதாந்தம் நாடாளுமன்றிலே நிறைவேற்றப்படும் அவசர காலச் சட்டத்தையும், போருக்கான நிதி ஒதுக்கீடுகளையும் த.வி. கூட்டணி எதிர்க்கிறது; எதிர்த்து வாக்களிக்கிறது.

ஆனால் யாழ்ப்பாணப் பிரதிநிதிகளென சிங்களவர்களும், உலகமும் நம்பும்படியான சூழ்நிலையில் ஈ. பி. டி. பி. அரசையும், போரையும் அதற்கான அவசரகாலச் சட்டங்களையும், போருக்கான நிதி ஒதுக்கீடுகள், வரவு செலவுத் திட்டத்தையும் ஆதரித்து வாக்களித்து வருகிறது. அத்துடன் இராணுவத்துடன் துணைப்படையாகவோ கூலிப்படையாகவோ வேலை செய்து அதற்கான சம்பளமும் சன்மானமும் பெற்றுக் கொள்கிறது. இவ்வாறு இன்னும் சில தமிழின் பெயரால் சில இயக்கங்கள் இருக்கின்றன. தேர்தலிலும் நிற்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் 'விடுதலைப்புலிகளைத் தோக்கடிக்க வேண்டுமானால் 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள்' என அரசுடன் பேரம் பேசுகிறார்கள் ஈ.பி.டி.பி யினர்.

இக்காரணங்களினால் கொள்கை அடிப்படையில் ஈ.பி.டி.பியுடன் வேறுபட்டு நிற்கின்றது த.வி. கூட்டணி. இந்த நிலைப்பாடு வெளிப்படையானதே.

### ஊர்காவற்றுறை நிலைமை

இதற்கும் மேலாக ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்வதாகவும், அங்குள்ள மக்களுக்குச் சோறுபோடுவதாகவும் கூறிக் கொண்டு உண்மையிலேயே கொத்தடிமைகளைப்போல் அம்மக்களை நடத்தி வருகிறார்கள். ஈ.பி. டி.பியினர்;

ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதேசத்திற்குள் ஏனைய கட்சிகள் தேர்தல் வேலைகளின் பொருட்டுக் கூடச் செல்லமுடியாது. ஆயுத முனையில் தடுக்கப் படுகின்றனர்; அச்சுறுத்தப்படுகின்றனர் சுதந்திரக்கட்சி, சுயேச்சைகள் உட்பட அனைத்துக் கட்சிகளுமே ஈ.பி.டி.பியின் அடாவடித்தனமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளன. ஆனால் த.வி. கூட்டணி மீது மட்டும் இத்தனை கோபம் ஏன் ஈ.பி. டி.பிக்கு?

சென்ற3 ஆம்நாள் நானும், யாழ். மாநகரத்துணை முதல்வர் ரவிராஜ்அவர்களும் நயினாதீவு சென்றிருந்தோம். குறிகாட்டுவானில் எம்மைத் தடுக்க முயற்சித்தது ஒருகும்பல். பலிக்கவில்லை. குறிகாட்டுவான் இறங்கு துறையில் மக்கள்குழுமிநின்றனர். இளம் பெண்களும், நாகபூஷணி அம்மன் பக்தர்களும் இருந்தனர். ஒருவர் தூஷணை வார்த்தைகளால் அர்ச்சித்துக் கொண்டிருந்தார். அவர் தான் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் கருணாகரமூர்த்திஎனப் பின்னர் அறிந்து கொண்டேன்.

வேறு கூட்டத்திற்கென அழைத்துச் செல்லப்பட்ட இன்னொரு கும்பல் நிதானமற்றவர்கள் முன்செல்ல யாழ்ப்பாணத்திலுள்ள த.வி. கூட்டணி அலுவலகத்தைத் தாக்க முற்பட்டது. திரு. ஆனந்தசங்கரி மீது வசைமாரி பொழிந்து வன்முறையிலீடுபட்டது இறுதியில் த. வி. கூட்டணிப் பெயர்ப்பலகையைச் சேதப்படுத்தித் தமது வெறியைத் தீர்த்துக் கொண்டது தீவகப் பிரதேசத்தில் மக்கள் த.வி. கூட்டணியை ஆதரிக்கப்போகிறார்கள் என்ற கலக்கம்தான் காரணம் - தாங்கள் மட்டுமல்ல மக்களையே வன்முறையிலீடுபடநிர்ப்பந்திக்கிறார்கள்

மறுபக்கத்தில் த. வி. கூட்டணியின் வெற்றியைத் தடுத்து நிறுத்த த. வி கூட்டணி ஆதரவாளர்களை, வேட்பாளர்களை அச்சுறுத்தி வருகின்றனர். தேர்தல் நெருங்கி வரும் வேளையில் அகதிகளுக்கும், தெருவில் காண்பவர்களுக்கும் உணவுப் பண்டங்கள் கொடுக்கிறார்களாம். கட்டுக்கட்டாகப் பண நோட்டுக்கள், மதுவகைகள், உடுபுடைவைகள் வழமைபோல் ஏராளம் ஒதுக்கப்பட்டுள்ளதாய் தகவல்கள்.

### அரசியல் வியாபாரம்

அரசுடன் அரசியல் வியாபாரம் செய்து கொண்டிருப்பது மட்டுமல்ல மக்களையும் இவ்வியாபாரத்தில் விற்பனைப் பண்டங்களாக மாற்ற நினைக்கிறார்கள். அப்பாவி மக்களை அபிவிருத்தியென்ற பெயரில் அரசியல் அபலைகளாக்குகிறார்கள்.

மாதா மாதம் பல இலட்சங்கள் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் உரிமைகளை விற்கும் அரசியல் வியாபாரக் கலாசாரத்தை மாற்றி மக்களை கொள்கை வழி மீட்டெடுப்பதை இவ்வியாபார சக்திகள் விரும்பவில்லை.

கடந்த 28 ஆண்டுகளாக எத்தனையோ இழப்புக்களையும், உயிர் ஆபத்துக்களையும் தாங்கிக் கொண்டு. இயங்கி வரும் த.வி. கூட்டணியையும், அதற்குள்ள மக்கள் ஆதரவையும் பொறுத்துக் கொள்ளாமல் அரசியல் நீரோட்டத்திற்கு வந்ததாகக் கூறும் இவ்வாயுதக் கும்பல்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி மீது வன்முறைத் தாக்குதலை மேற்கொண்டு மக்களை அச்சுறுத்தி வாக்களிப்பதைத் தடுக்கும் முயற்சிகளிலீடுபடுவதை மக்கள் அனு

(VIII ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

புரட்டாதி 24

செவ்வாய்க்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 01. 30 வரை.

நட்சத்திரம்: சதயம்

முன்இரவு: 7. 09 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 10.32—12.02

ராகுகாலம்: 3.02—4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

நேற்றுச் செய்த தவறுக்கு இன்று பரிகாரம் காண முடியாது. தவறே நிகழாமல் பார்த்துக் கொள்!

- ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டெடுக்கப்பட்டது

கடந்த வெள்ளிக்கிழமை 06—10—2000 அன்று அச்சுவேலியைச் சேர்ந்த 29/5595 சிற்றூர்தியில் பயணம் செய்த ஒருவருடைய HAND BAG (கைப்பை) நகைகள், சீசன் ரிக்கட் ஆகிய பொருள்களுடன் சாரதி திரு. தயாபரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் இ. கிருஷ்ணன் M.L.T என்பவரை இரத்த வங்கி போதனா வைத்தியசாலையில் சந்தித்துப் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர்,
சிற்றூர்திச் சங்கம்,
அச்சுவேலி.

(79303)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச சபையின்
கௌரவ தலைவர்

திரு. ஐயாத்துரைசிறிரங்கேஸ்வரன்(J.P.U.M)
அவர்களின் அன்புத் தந்தை

### செல்லையா ஐயாத்துரை

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(சி/13302)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூக நிலைய
உபதலைவர்
திருச்செல்வம் அவர்களின்
அன்பு மனைவி

### திருச்செல்வம் இரத்தினம்

அவர்களும்
நிலைய உறுப்பினர் போல் இராசதுரை
அவர்களின் அன்பு மகன்

### றொபின்கில்சன்

அவர்களும் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அத்தோடு அன்னார்களின் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக அங்கத்தவர்கள்,
புனித மிக்கேல் சனசமூக நிலையம்.
உரும்பிராய்.

(79296)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 25 — 11 — 1955



விண்ணில்: 09 — 09 — 2000

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தச்சன் தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் ஆறுமுகம் தெய்வேந்திரம்

09—09—2000 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (09—10—2000) திங்கட்கிழமை நடைபெறும் இந் நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி
தெ. இராசாத்தியம்மா,
பிள்ளைகள்,

தற்காலிக முகவரி:
ஆசாரியார் ஒழுங்கை,
கோப்பாய் மத்தி.

(793[illegible])

## மின்சாரம்

புன்னாலைக்கட்டுவன் கிழக்கு மற்றும் புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பகுதிகளுக்கும் ஈவினை பகுதிக்கும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

பொது மக்களின் வேண்டுகோளையடுத்து பிரதேசசபையின் உதவியுடன் மின் கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்புக்கள் பொருத்தப்பட்டு ஈவினை தெற்கு பகுதிக்குமின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளுக்கு அடுத்த வாரம் மின்சாரம் வழங்கப்பட உள்ளது. (இ-133)

## தேர்தல் பணி கடிதங்களை பெறுவதில் சிரமம்

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் தேர்தல் கடமைக்கான கடிதங்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தபால் கந்தோர்களும், அரச திணைக்களங்களும் இடம்பெயர்ந்து இயங்குவதனால் தேர்தல் கடமை தொடர்பான கடிதங்களை எங்கு பெற்றுக் கொள்வது என்று தெரியாத நிலையில் அவர்கள் இருந்து வருகின்றனர். (இ133)

## வைத்தியசாலை வளவில் கிணறு

யாழ்ப்பாணம், ஒக். 9

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை வளவில் கிணறு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபையினர் மேற்படி கிணற்றை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

விஜயதசமி தினமான நேற்று முன்தினம் மேற்படி கிணறு பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

(இ-7)

## சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதம கண்காணிப்பாளர்கள், உதவிக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரை இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் சமுகம் அளிக்கும்படி இந்தக் குழுவுக்குப் பொறுப்பான உறுப்பினர் கேட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில்வைத்து நியமனக்கடிதங்கள் கையளிக்கப்படுவதுடன் கடமை தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்.

(இ-3)

## கௌரவிப்பு

கற்கோவளம்கும்பி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின்போது சமயக் கிரியைகளை நடத்திய பிரம்மஸ்ரீ தியாக சோமஸ் கந்தராஜக் குருக்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஆலய அறங்காவலர் சபையினரும் உபயகாரர்களும் ஒன்றிணைந்து நடத்திய இவ் வைபவத்தில், பொதுஅறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ஐ-109)

## புலியைக் கொன்று தோல். நகங்கள் அபகரிப்பு

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஹைதரபாத் நேரு வனவிலங்குப் பூங்காவில் விஷமிகள் சிலர் கூண்டை உடைத்து புலியைக் கொன்று [illegible] சென்றுள்ளனர்.

## பட்டமளிப்பு விழா பாராட்டும் வாழ்த்துக்களும்

6-10-2000 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்பு கலைமாணி இந்துநாகரிகம் பட்டம் பெற்ற
புங்குடுதீவு

### பிரம்மஸ்ரீ இரகுநாதகுருக்கள் கமலநாதசர்மா

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி கலாவதி பிரகதீஸ்வரன்
(ஆசிரிய ஆலோசகர்)

திரு. திருமதி கீதநந்தினி சிவகுமார சர்மா
(மலேசியா)

திரு. திருமதி சாயிஜீவானந்தன் ஜானகி
(ஸ்ரீலங்கா ரெலிகொம் யாழ்.)

(79309)

## நன்றி கூறுகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தையே மறந்து
யாழ். மாவட்டத்தில் போட்டியிடும்

அரசியற் கட்சிகளும்
சுயேச்சைக் குழுக்களும்

தமது சுயலாபங்களுக்காக வாக்கு வேட்டையாடிக் கொண்டிருக்கும் பொழுது உலக ஆசிரியர் தினமாகிய கடந்த வெள்ளிக்கிழமை (6 - 10 - 2000) பத்திரிகை மூலம் எமது ஆசிரியர் சமூகத்தினரை வாழ்த்தியதுடன் ஆசிரியர் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உறுதியுரை வழங்கியுள்ள

ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளராகிய

திரு. தியாகராசா மகேஸ்வரன்

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதுடன் எமது ஆதரவையும் நல்குவதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆசிரியர் சமூகம்
யாழ். மாவட்டம்

(சி/13308)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் கனகம்மா

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் கனகம்மா நேற்று (08- 10- 2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற முன்னாள் விவாக,பிறப்பு, இறப்புப்பதிவாளர் சுவாமிநாதர் சுப்பிரமணியம்அவர்களின் அன்பு மனைவியும், குமாரசாமி (கொழும்பு), மகேஸ்வரி, யோகீஸ்வரி (பதிவாளர், கோப்பாய்), காலஞ்சென்ற கந்தசாமி, நாகேஸ்வரி(ஆசிரியை, நாவலர் வித்தியாலயம் கோப்பாய்), குருநாதசாமி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீவரதராஜன்(முன்னாள் மாவட்ட மருந்தாளர்),சிவநாதன் (கிராம அலுவலர், துர்க்காபுரம்), லிங்ககுமாரி (கொழும்பு), சிவசோதி, எமிலிகா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09-10-2000) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கோப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி யோ. ஸ்ரீவரதராஜன்
(பதிவாளர், கோப்பாய்)
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(79313)

### தம்பையா சொர்ணலிங்கம்

(இணுவில்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவில் கிழக்கில் வசித்தவருமான தம்பையா சொர்ணலிங்கம் 05- 10 - 2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சின்னப்பிள்ளையின் அன்பு மகனும், சிவநேசத்தின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற செல்லமுத்து, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், சிவ. சொர்ணகௌரி (ஆசிரியை, வவுனியா, மகாவித்தியாலயம்), பாஸ்கரமூர்த்தி (சுவிஸ்), வசந்தமாலா, பிரபாகரன் (பிரான்ஸ்), பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06 - 10 - 2000) வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
சொ. சிவநேசம்
(மனைவி)

இணுவில் கிழக்கு.
இணுவில்.

(79307)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்துச் செயற்பட வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் தமிழர்கள்

**நாளை நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் வாக்களிப்பை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் விடுத்த அறிக்கை இது.**

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

இலங்கை வாழ் மக்கள் இன்று பொதுத் தேர்தலை அண்மித்த பரபரப்பான சூழலில் உள்ளனர். இவர்களைப் பொறுத்தவரையில் பயன் ஏதும் கிட்டாத, மாறாக வன்முறையின் வடிவத்தினை மட்டும் மாற்றியமைக்கக்கூடிய ஆற்றல் கொண்ட இந்தத் தேர்தல், பேரினவாதிகளின் நலன்களை சீரமைக்கும். ஒட்டுமொத்தமான தமிழினத்தின் வாழ்வை விற்று தம்பதவிப் பசியினைப் போக்கும் சில தமிழ்ப் புல்லுருவிகளுக்கு விருந்தாக அமைகிறதேயொழிய அதனால் தமிழ் மக்களின் வாழ்வுக்கு பயன் ஏதும் அணுவளவும் கிட்டாது என்பதே உண்மை; இது வரலாற்று வெளிப்படையும் கூட.

என்றும் பாதகமான முடிவுகளையே கொடுத்துள்ள இத்தகைய தேர்தல் விவகாரத்தில் ஒரு திருப்பத்தினை உண்டுபண்ணும் ஆற்றல் தமிழ் மக்களிடம் உண்டு. தேர்தல் என்பது ஒரு ஜனநாயக லட்சணம் எனினும் நீதி, சட்ட விவகாரம், மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம் என்பவை தமிழரைப் பொறுத்தவரை மறுக்கப்பட்டுள்ள இலங்கையிலே, கடந்த காலத் தேர்தல்கள், எம்மினத்தையே விற்கும் கோடரிக் காம்புகளை உருவாக்கியதேயொழிய வேறெதுவும் செய்யப்படவில்லை.

எனவே எமது அணுகுமுறையே எதிர்கால எம் தலைவிதியை நிர்ணயிக்கும்.

இன்று எம் பிரதிநிதிகளாகத் தேர்தலில் நிற்பவர்களின் கடந்த காலங்களைப் பற்றி, அவைகள் தந்த படிப்பினைகள் பற்றி, இவர்களுக்கும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆற்றலும் தகுதிப்பாடும் உண்டா என்பதுபற்றி, அதன்பின்பு ஆற்றப்போகும் படுபயங்கரமான செயற்பாடுகள் பற்றி சற்று யோசிப்போம்......

கடந்துபோன தேர்தல் அனைத்திலும் — ஐம்பதுகளில் இருந்து — தமிழ் மக்கள் பங்களித்த போதிலும் இதுவரை தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவோ உரிமைகள் வழங்கப்பட்டதாகவோ அல்லது அதற்கான நியாயமான முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவோ இல்லை. மாறாக, தமிழர் பிரதிநிதிகள் எம்மினத்தின் விழுமியங்களை விற்று, கதிரைகளைச் சூடேற்றி தம்பதவிப் பசியினைப் போக்கியதைத் தவிர வேறேதும் இடம் பெறவில்லை.

இத்தேர்தலில் பிரதான இரு கட்சிகளில் எது ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதிலும் தமிழ் மக்களை இலங்கையின் ஒரு தேசிய இனமாக மதித்து உரிமைகளை வழங்குவதிலும், ஆளும், எதிர்க்கட்சிகளோ பேரினவாத அரசியலில் செல்வாக்கு உள்ளவர்களோ தயாராக இல்லை. மறுபுறம் அவலம் நிறைந்த எம் வாழ்வை மேலும் மரணக் குகையினுள் தள்ளும் வழியினையே அவை போட்டா போட்டியிட்டபடி தொடரும்.

தேர்தலில் குதித்துள்ள — தமிழர் பிரதிநிதிகள் என்று தம்மைத்தாமே தான்தோன்றித் தனமாகக் கூறிக்கொள்ளும் — ஆயுதம் ஏந்திய முன்பு ஏந்தி தற்போது வெறுமையோடு நிற்கும் சுயேச்சைக் குழுக்கள், நிராயுத பாணியான இவர்கள் எல்லோரும் கொடூரமான கறை படிந்த கடந்த காலத்தினையையே அவர்களது செயற்பாட்டின் மூலம் உரிமையாக்கிக் கொண்டவர்கள். 1980 களின் பிற்பகுதிகளில் இந்திய ராஜீவ் படைகளுடன் கூட்டுச்சேர்ந்து தமிழ்இளைஞர்களைக்கொன்றும், சித்திரவதை முகாம்கள் அமைத்தும் பொதுமக்களை இனங்காட்டிக் கொடுப்பதில் தலையாட்டிகளாகவும், நேரடியாகவும் இவர்களின் கொடூரமான பங்கு மதிப்பிடுவதற்கு கடினமானது. இதேகாலத்தில் இவர்கள் துப்பாக்கி முனையில் தமிழ் வர்த்தகர்களையும், மக்களையும் மிரட்டி கப்பம் பெற்றனர். மறுத்தவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியெங்கும் இவர்கள் தலைமையிலும் மேற்பார்வையிலும் தலைவிரித்தாடிய கொடூரத்தால் தமிழ் மக்களிடையே நிரந்தரமான எதிரி என்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டனர். இன்று அரசு தமிழ்மக்கள் மேல் நடத்தி வரும் கொடூர யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் அங்கவீனப்பட்டும். பல்குழல்களினால் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. இத்தகைய இன அழிப்புச் செயற்பாட்டையும் மனித உரிமை மீறல்களையும் மூடிமறைக்கவும் நியாயப்படுத்தவும் கருதியே அரசு இதற்கு சமாதானத்திற்கான போர் என்றும், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்றும் பிரசாரம் செய்கிறது. இத்தகைய உண்மைத் தோற்றத்தை திரிவுபடுத்தி வெளியுலகிற்கு காட்ட அரசு போடுகின்ற எச்சில் இலைக்கு வாலாட்டுகின்ற அற்பசொற்ப வசதிக்காக அரசிடம் கையேந்துகின்ற, செஞ்சோற்றுக்கடனுக்காய் தமிழினத்தைவிற்கின்ற, இவர்கள் பயங்கரவாத யுத்தமென அரசு செய்யும் பிரசாரத்தை அங்கீகரிக்கின்றனர்.

பயங்கர வாதம் என்பது ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ தம் சுயநலனுக்காக ஆயுதக் கலாசார வன்முறையை மக்களின் விருப்புக்கு மாறாகவும் எதிராகவும் மேற்கொள்வது ஆகும். ஆனால் இன்று இலங்கையில் நடைபெறுவது உரிமைப் போராகும். இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழினத்தின் மறுக்கப்பட்ட உரிமைக்காகவும், வன்முறையில் இருந்து பாதுகாக்கவும், விடுதலைக்காகவும் மக்கள் ஆதரவுடன் மக்களால் நடத்தப்பட்டு வருகின்றன விடுதலைப் போரை அரசு பயங்கரவாதம், தீவிரவாதம் எனக் கொச்சைப்படுத்துவதற்கு இத் தமிழ்க் கட்சிகளின் ஆதரவு மகத்தானது.

அரசு இன்று உருவாக்கியுள்ள — தமிழர் தரப்பால் ஏற்றுக் கொள்ளத் தகுதியற்ற — அரைகுறைத் தீர்வுத் திட்டத்தினை தமிழர் மீது திணிப்பதாகும் ஆனா யல் தீர்வுக்கு தான் தயாராக உள்ளதை வெளியுலகிற்கு காட்டுவதற்கே ஆகும். இத் தீர்வுத்திட்ட சதிமுயற்சிக்கு இங்குள்ள தமிழ்க் கட்சிகள் சில ஆதரவு தெரிவித்தும் மௌனம் காத்து சம்மதத்தை வழங்கியும் வருகின்றன.

மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு வரும்போது அவற்றை நியாயப்படுத்துகின்ற அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றை காலம் காலமாக நீட்டி வருகின்ற அரசின் முயற்சிக்கு இப் போக்கிரித்தனமான கும்பல்கள் ஆதரவு தெரிவித்து தமிழரது இனத்துக்கே துரோகம் இழைக்கின்றனர். இத்தகைய சட்டங்களே தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும், மந்தைகளாகவும் நடத்தப்படுவதற்கும், படுகொலைகள், சித்திரவதைகள், கற்பழிப்புகள், கைதுகள் என எம்மினம் கொடூரப்படுத்தப்பட்டு வருவதற்கும் உரிய ஏற்பாட்டினை அரசுக்கு வழங்குகின்றது.

இனத்துரோகிகள் எனப்படுவோர் ஓர் இனத்தில் பிறந்து அவ்வினத்திலேயே பரிணமித்து, அவ்வினத்தின் நம்பிக்கைக்குமாறாக நடந்து கொள்கின்ற இனத்தின் தேசிய விழுமியங்களை விற்று வயிறு பிழைக்கின்ற, தம்மினத்தையே காட்டிக் கொடுக்கின்ற, தம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் கொலைகள், சித்திரவதைகள், கற்பழிப்புகள், காணாமல் போதல் போன்றவற்றிற்கு உடந்தையாக இருப்பவர்களே இவர்கள் ஆவர்.

இத்தகைய அத்தனை இலட்சணங்களையும் கொண்டுள்ள தமிழ்க்குழுக்கள் முழுமையான தமிழ்த் துரோகிகள் என தமிழ்மக்கள் மத்தியில் புறந்தள்ளப்பட்டமை ஆச்சரியத்திற்கு உரியதல்ல. செம்மணியில் எம் தமிழ் உறவுகள் நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொடூரப்படுத்தப்பட்டு புதைக்கப்பட்ட போதும், கிருஷாந்தி, ரஜனி, கோணேஸ்வரி, சாரதாம்பாள் போன்ற இளம் யுவதிகள் இராணுவப் பேய்களால் குதறப்பட்ட போதும் மௌனமானார்கள் சோமசுந்தரம், சஞ்சீபன், மாணிக்கவேல், விஜயதர்சன் போன்ற பல நூறு இளைஞர்கள் துடிக்கத் துடிக்க கொலை செய்யத்பட்ட போதும் பளைப்பகுதியில் அப்பாவி மக்கள் கேடயமாகத் தடுத்து வைக்கப்பட்ட போதும் மௌனம் சாதித்தனர். மக்களின் கண்ணீரை துடைப்பதல்லவே அவர்களது நோக்கம். அரசின் அனைத்து நடவடிக்கைகளிற்குமாக குத்தகைக்கு வாங்கப்பட்ட இத் தமிழ்க் கும்பல்கள் எப்படி அரசின் மனம் புண்பட நடந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியும்?

இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் வேண்டிய வேலை வாய்ப்புக்கள் புனரமைப்பு வசதிகள், அபிவிருத்தி வசதிகள், நிதியுதவிகள் என்பவற்றை வழங்க வேண்டியமை அரசினது தார்மீகக் கடமையாகும். ஆனால் [illegible] சதி முயற்சியால் தமிழர்களால் ஏற்று அங்கீகரிக்கப்படாத தமிழ் துரோகக் கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி இத் தார்மீக செயற்பாடுகள் ஊழல், பாகுபாடுகள், இலஞ்சம் நிறைந்தனவாகவும் உள்ளன.

நாம் சுயமரியாதையுடனும், சுயமுயற்சியுடனும் முன்னேறிய பின்பு தொழிலுக்காகவும் மற்றும் அத்தியாவசிய தேவையின் பொருட்டும் எமது துரோகிகளிடையே கையேந்தும் அரசியல் சதியினைஇன்று தமிழ்மக்களிற்கு அரசு திணித்துள்ளது. அரசு வழங்கும் அற்ப சொற்பமான வேலை வாய்ப்புக்கள் புனர்வாழ்வு புனரமைப்புக்கள் நிதியுதவிகளினை பெரும் புதையல் கிடைத்துவிட்டதாகத் தொண்டை கிழியுமாப்போல் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கின்றனர். இப்படிப்பட்ட கும்பல்கள் தாமே தமிழர் பிரதிநிதிகள் என்றும், தமிழர் உரிமைக்காகப்போராடுபவர்கள் என்றும் சுதந்திரம் பெற்று யுத்தமற்ற பூமியை உருவாக்கப் போவதாகவும், சுபிட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தப் போவதாகவும், அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றப் போவதாகவும் கூறி எம்மை மனமாற்றத் துடிக்கின்றமையும் புரட்சி, விடுதலை வசனங்களையும் புலிகளின் தியாகங்களையும் மக்களிற்கு மாண்புடன் எடுத்துக்கூறி வாக்கு வேட்டைக்கு வாலாட்டுகின்றன. இத் துரோகிகளை நடமாட அனுமதித்ததே அப்பட்டமாக தாம் இளைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அரசின் கைக்கூலிகளாக இயங்கும் தமிழ்க்கட்சி அலுவலகம் ஒன்று அதனுடைய அரசியல் எதிர்க்கட்சி ஒன்றின் தூண்டுதலால் தாக்கப்பட்டுள்ளது, தன் அரசியல் நலனுக்காக அப்பாவி மக்களைப் பலிக்கடாவாக்கித் தமது அரசியல் எதிரிகளை ஒழிக்க மக்களைத் தூண்டும் நிலையை உருவாக்கித் தம் முள் சண்டை நிலைமைகளை உருவாக்கும் என்பதே உண்மை. வவுனியாவில் இதுவரைகாலமும் நடந்தது இது தான். ஆயுதக் குழுக்களுக்கிடையிலான முறுகலினால் பல அப்பாவி இளைஞர்களைக் கொன்றும். தலைகளை வெட்டியும், வெள்ளை வானில் கடத்தியும் நாசகாரம் புரிந்துள்ளனர். அது போன்ற நிலைமை இவர்களால் யாழிலும் ஏற்படலாம் என்பதற்கு அன்றைய தாக்குதல் சான்று பகிர்கின்றது.

இன்று தமிழ்க் கட்சிகளும், முக்கிய இரு பெரும் கட்சிகளும் வாக்கினைப் பெறுவதற்காகச் சில நிர்வாக உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், பெரியவர்களையும். பணத்தினைக் காட்டியும், பட்டம் பதவிபோன்ற மோகங்களைப் பயன்படுத்தியும் தமது சார்பாகச் செயற்படுவதற்கு விலையாக இவர்கள் சோரம் போய்விட்டனர். இத்தகைய துரோகத் தனமானவர்கள் தாம் பிழையான பாதையில் சென்றதுடன் மக்களையும் தவறான பாதையில் நடத்திச் செல்வது மாபெரும் துரோகச் செயலாகும்.

இன்றைய எமது தமிழர் பிரதிநிதிகள் என்ற இவர்கள் பற்றி இங்கு குறிப்பிட்டுள்ள விடயத்தினால் தம் உண்மையான சுயரூபம் மக்களுக்குப் புலப்பட்டு விட்டதென காழ்ப்புக்கொண்டு அதனை மூடி மறைக்கும் முகமாக எம்மை விமர்சிக்கவும் கூடும். பொறுப்புள்ளக் கல்வி கற்ற சமூகம் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றது எனக் குற்றஞ் சாட்டவோ விசமிகள் சிலர் தமக்கும் மக்களுக்கும் உள்ள உறவைக் கெடுக்க முற்படுகின்றன என்று சொல்லி மூடி மறைக்கவோகூடும்.

இது எம்மையும் எம் இனத்தையும் காப்பாற்ற வேண்டிய தார்மீகக் கடமையாகும். இதற்காக ஓர் இக்கட்டான சூழலில் மக்களை வழிப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு.

★


## பாராட்டி வாழ்த்துகிறோம்

6 — 10 — 2000 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எனது ஆருயிர் நண்பன்

**செல்வன் J. சாள்ஸ் நிமலன்**
B. A., Hons. (UJF)

மற்றும் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி மைந்தர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

வலம்புரி றேட் சென்ரர் (VTC),
நவாலி.

(சி/133000)

## கண்ணீர் அஞ்சலி

எமது புவியியற்றுறை இறுதியாண்டு மாணவி
செல்வி கலைச்செல்வி மார்க்கண்டு
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மார்க்கண்டு கணேசம்மா**

அவர்கள் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

புவியியல் சிறப்புக்கலை மாணவர்கள்
இறுதியாண்டு "A" பிரிவு,
யாழ், பல்கலைக்கழகம்.

(79300


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் வாக்குச் சாவடிகள்

## வன்னி இ. தொ. கா. வேட்பாளர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 9

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் அரசாங்கக் காட்டுப்பட்டில் இல்லாத வாக்காளர்களுக்காக அந்த இடங்களில் வாக்குச்சாவடிகளை அமைத்து உதவுமாறு வன்னி மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர் எஸ். சுரேஷ்குமார் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் சுரேஷ்குமார் மேலும் தெரிவித்திருப்பதாவது.

அரசாங்கக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தில் இருப்பவர்கள் வவுனியாவுக்கு வருவதற்கு அனுமதி பெறுவதில் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். இப்பகுதியில் உள்ள சகலவாக்காளர்களும் அனுமதி பெறுவது சிரமமான காரியம்ஆகும்.

குறிப்பாக முல்லைத்தீவுப் பிரதேசத்தில் 53054 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளார்.

இங்கு முன்னர் 50 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. ஆனால் இன்று முல்லைத்தீவு முழுவதற்கும் ஒரே ஒரு வாக்குச்சாவடி கிரிபன் வேவ மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 950 வாக்காளர் மட்டுமே உள்ளனர். ஏனைய வாக்காளருக்குவாக்குச்சாவடி எதுவும் இல்லை.

ஆகவே முல்லைத்தீவு உட்பட ஏனைய அரசாங்கக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

வாக்களிக்கும் உரிமையை மறுப்பது மனித உரிமை மீறல் ஆகும். புதிய வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுவதற்கு தற்போது போதிய கால அவகாசம் இல்லாவிட்டால் 'பாஸ்' வழங்கும் திட்டத்தில் உள்ள கெடுபிடிகளை தேர்தலுக்காக தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக் கூறி உள்ளார்.

(இ)

## அரச ஊழியருக்கு கூட்டணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 9

நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எம்மக்கள் பல வழிகளிலும் துன்பப்படுகின்றார்கள். குறிப்பாக ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் எனக் கூறிக்கொண்டு கில குழுக்கள் அப்பாவி மக்களை துன்புறுத்தியும், அராஜகம் புரிந்தும் வருகின்றன. இந்த அவல நிலை மாறி நமது மக்கள் நிம்மதியாக வாழ வகை செய்யவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே அராஜகம் புரிகின்றவர்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற துணைபோக வேண்டாமென மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வாக்களிப்பு நிலையங்களில் தப்பான முறையில் வாக்களிக்க விடாது தடுக்க வேண்டுமெனவும், தேர்தலை பாகுபாடு அற்ற முறையில் நடத்தித் தரவேண்டுமெனவும் அரச ஊழியர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்—

என்று அதில் உள்ளது.

(ஐ-7)

## விடுமுறைநாள்களில்கடைகளை மூடி ஒத்துழைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் (தேநீர்க் கடை, மருந்து விற்பனை நிலையம், வாகனம் திருத்தும் நிலையம் தவிர்ந்த) ஊழியர்களுக்கு சனிக்கிழமைகளில் அரைநாளும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் விடுமுறை வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கம் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல வருடங்களாக வர்த்தக ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் லீவு வழங்கப்பட்டதுடன் ஏனைய வர்த்தக விடுமுறை நாள்களிலும் ஓய்வு வழங்கப்பட்டது.

இடையில் சில வர்த்தகர்கள் இந்த நடைமுறையை மீறிச் செயற்பட்டதினால் 512 ஆவது படையணித் தளபதி வர்த்தகர் சங்கம், வர்த்தக ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் தொழில் ஆணையாளர் போன்றோரையும் அழைத்து பேச்சு நடத்தி ஊழியர்களின் விடுமுறை சம்பந்தமாக உடன்பாடு ஒன்று காணப்பட்டது.

கடந்த மே மாதத்துக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையைத் தொடர்ந்து பல வர்த்தக நிறுவனங்கள் சனி, ஞாயிறு மற்றும் போயா நாள்களிலும் திறக்கப்படுகின்றன. சில வர்த்தகர்களின் இத்தகைய நடவடிக்கையினால் ஊழியர்கள் பாதிக்கப்படுவதுடன் அன்றைய தினங்களில் தமது நிறுவனங்களைப் பூட்டி வைத்திருக்கும் வர்த்தகர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே ஊழியர்களின் நலன் கருதி அவர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள்களும் போயா விடுமுறைத் தினங்களிலும் லீவு வழங்குமாறு கோருகிறோம். தொழிலாளர்களுக்குரிய ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்றவற்றையும் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ

## நெடுந்தீவில் நோய் பரவும் ஆபத்து

யாழப்பாணம், ஒக். 9

நெடுந்தீவில் செங்கண் மாரிநோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களில் மட்டும் சுமார் 7 பேரில் இந்த நோய்க்கான அறிகுறிகள் இனங்காணப்பட்டுத் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் என நெடுந்தீவுப் பகுதிக்கான பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சி. அருந்தவராசா தெரிவித்தார்.

மேற்படி நோய்த்தாக்கத்தில் இருந்து நீங்குவதற்கு பொதுமக்கள் கொதித்து அறிய நீரைப் பயன்படுத்த வேண்டும் எனவும் —

பொதுமக்கள் மலசலம் கழிப்பதற்கு மலசலகூடங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் —

சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்தி உள்ளார்.

(ஐ-7)


## சனீஸ்வர ஹோமம்

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் 14 - 10 - 2000 சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை தாணு— வாசுதேவ குருக்கள் தலைமையில் சனீஸ்வர ஹோமம் நடைபெறும்.

பங்கு கொள்ளும் அடியார்கள் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும்.

சி. பரமேஸ்வரன்
தர்மகர்த்தா.

(79087)

## வாழ்த்துகின்றோம்

**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை**

5 ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்பு மகன்

**செல்வன் பு. விஷ்ணு - 166 புள்ளிகள்**

பெற ஊக்குவித்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், IBM நிர்வாகி K சபேசன் ஆசிரியர் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

– பெற்றோர்

[79264]

யாழ். மாவட்ட

## சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தால்

06-10-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட போது

**வெற்றி பெற்ற இலக்கங்கள்**

முதலாம் பரிசு- 3400, இரண்டாம் பரிசு-1128, மூன்றாம் பரிசு - 3981.

**ஆறுதல் பரிசுகள்**

3432 3877 4863 4729
2310 0700 2811 0229
5978 4100

வெற்றி பெற்ற இலக்கத்திற்குரியவர்கள் 15-10-2000 இற்கு முன்னர் எமது சங்கத் தலைமை அலுவலகத்தில் காலை 10.00—2.00 மணிக்கு இடையில் வருகை தந்து பெயர்விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். பரிசில்கள் தங்களுக்கு உரிய முறையில் வழங்கப்படும்.

(79270)   - நிர்வாகிகள்.


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000-10-10

### வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச்சிட்டின் மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | சின்னம் | |
| "ஆ" கட்சி | சின்னம் | |
| "இ" கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 3 | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

01. இது வாக்குச் சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

02. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் 'புள்ளடி' யிடல் வேண்டும்.

03. ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் முறையே ஒரு வரிசையில் பத்து என்றவாறு கீழ்ப் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடையாளமிடும் போது நீர்விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின் மீது உங்களால் 'புள்ளடி' இடப்படல் வேண்டும், வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை மீது உங்கள் விருப்பினை அடையாளமிட முடியும்.

04. வாக்கொன்று இல்லாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும் படும் ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதே பொருத்தமானது என்பதைத் தயவுகூர்ந்து நினைவிற் கொள்ளவும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
ஸ்ரீ ஜயவர்தனபுர.

(சி/13295)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை

**மாணவி மா. கபில்ரன் காஞ்சனா**

(152 புள்ளிகள்)

எமது புத்திரியை ஊக்குவித்துச் சித்தி பெறச் செய்த அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி பாஸ்கரன்
உரும்பிராய்.

பேரன்: தமியரம்பிள்ளை அருண்பிரகாசம்
(முன்னாள் இ. போ. ச. சாரதி)

(79253)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கௌரவமான அரசியல் தீர்வு அவசியம்

## ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் தெரிவிப்பு

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு கௌரவமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

மழைக்காலத்தில் முளைக்கும் காளான்கள் போல் தேர்தல் காலத்தில் மக்களை நாடி ஓடிவரும் கட்சியல்ல ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பதை மக்கள் நன்கு அறிவார்கள் மக்களின் நாளாந்தப் போராட்டங்களில் நாம் எவ்வாறுபங்கெடுக்கின்றோம்? தொடர்ந்து எவ்வாறு பங்கெடுப்போம் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த 20, 25 வருடங்களாக எமது பல முன்னணித் தோழர்கள் தமிழ் பேசும் மக்களின் அரசில் உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்காக கடினமாக உழைத்து வருகின்றார்கள். எமது போராட்டம் ஆயுதம் தாங்கிய போராட்டமாகப் பரிணமித்து 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பியது.

பல்வேறுபட்ட கசப்பான அனுபவங்களைக் கொண்ட எமது அரசியல் போராட்ட வரலாற்றில், 1988 இல் காலத்தின் கட்டாயம் கருதி ஈ. பி. டி பி யைத் தோற்றுவித்தோம்.

### தீவகத்தில் எமது பணி

1990 களில் இரண்டாவது ஈழப்போர் வெடித்து எமது தேசமெங்கும் பரவியது. இந்த யுத்த அனர்த்தங்களினால் குறிப்பாக தீவுப்பகுதி மக்களும் ஏனைய பிரதேச மக்களைப்போன்று சொல்லொணாத்துன்பதுயரங்களை அனுபவித்தார்கள். தீவுப் பகுதி ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமல்ல என அன்று சில தமிழ்த் தலைமைகள் தீவுப் பகுதியைக் கைவிட்டனர். தீவக மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு முடிவு கட்ட வேண்டும், ஓர் அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டும் என்ற அவாவுடன் எமது அரசியல் வேலைத்திட்டத்தை உறுதியோடு முதன் முதலில் தீவகத்தில் ஆரம்பித்தோம்.




உணவுப் பொருள்கள் இல்லாமல், போக்குவரத்து வசதிகள் இல்லாமல், மருத்துவ வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்ட மக்களின் கடினங்களை எம்மால் இயன்றவரை தீர்த்து வைத்தோம். இப்பணிகள் நாடாளுமன்றக் கதிரைகளை மனதில் வைத்துக்கொண்டு நாம் செய்யவில்லை என்பதையும் இப்பணிகளின்போது எமது பாசத்திற்குரிய பல தோழர்களையும் நாம் பறிகொடுத்தோம் என்பதையும் அப்பகுதி மக்கள் நன்கறிவார்கள்.

அதனால்தான் தீவுப் பகுதி மக்கள் தமது பேரன்பையும் பேராதரவையும் எமக்குத் தருவதோடு, எமது கட்சியின் கோட்டையாகத் தீவுப் பகுதியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். சில வருடங்களின் முன் யாழ். மாவட்டத்திலும் இதுபோன்ற ஓர் அரசியல் தலைமை வெற்றிடம் 1995 இல் ஏற்பட்ட ரிவிரச யுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்டது.

தொடர்ந்து இன்றுவரையும் ஏனைய தமிழ்த் தலைமைகளைப்போன்று நெருக்கடியான கால கட்டங்களில் மக்களை விட்டுத் தப்பிச் செல்லாது என்றும் மக்களோடு மக்களாக ஈ. பி. டி. பியினராகிய நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளக்குடியேறும் வரை யாழ்ப்பாணத்தில் காலடி வைக்கமாட்டோம் எனக் கூட்டணியினர் அறிக்கை விட்டனர். ஆனால் தேர்தல் அறிவிப்பு வந்ததும் தமது நிபந்தனைகளைக் கைவிட்டு ஓடிவந்து இன்று உங்களுடன் பசப்பு வார்த்தைகள் பேசுகின்றார்கள்.

அண்மையில் வெடித்த யுத்தத்தை அடுத்து யாழ். நகரம் புலிகளின் கைக்கு மாறிவிடுமோ என்ற ஒரு நிலைமை தோன்றியவுடன் தமது கட்சியை இருப்புக்கு மட்டும் பிரதிநிதித்துவம் செய்து கொண்டு வெற்று அரசியல் நடத்திக்கொண்டிருந்த அரசியல் கட்சிகள் தமது கீழ்மட்ட அரசியல் உறுப்பினர்களை கலைத்துவிட்டும் அலுவலகங்களை மூடிவிட்டும் மூடை முடிச்சுக்களுடன் பாதுகாப்பாகக் கொழும்புக்குத் தப்பிச்சென்று விட்டனர். ஆனால் யுத்த அவலங்களுக்குள் சிக்கித் தவித்த மக்களுக்கு ஆதரவாக உறுதியோடு செயற்பட்டவர்கள் ஈ. பி. டி. பியினராகிய நாம்தான்.

### அரசியல் தீர்வு அவசியம்

சில அரசியல் வாதிகள் அரசியல் தீர்வு இல்லாது அன்றாடப்பிரச்சினைகளைத், தீர்க்க இயலாது என விவாதித்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத்தீர்ப்பதில் கவனம் செலுத்தாது விட்டுவிடுகின்றனர். அரசியல் தீர்வு இல்லாமல் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்க இயலாது என்பதை நாமும் ஒப்புக்கொள்கின்றோம். ஆனால் கௌரவமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை சமகாலத்தில் தற்காலிகமாகவேனும் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை யுத்த நெருக்கடிக்குள் வாழும் மக்கள் மத்தியில் வேலை செய்யும் கட்சியினராகிய எமக்கு மட்டும் தான் புரியும்.

அரசியல் தீர்வு எட்டப்படும் வரை இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது யார்?... மின்சாரம், போக்குவரத்து, மருத்துவம், தொலைத் தொடர்பு போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது யார்? கடல் வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு தமது மீன்பிடித் தொழிலைதொடர முடியாத மீனவர்களின் நலன்களைக் கவனிப்பது யார்? யுத்தத்தின் நிர்ப்பந்தத்தால், விவசாயத்தை மேற்கொள்ள முடியாது தமது குழந்தைகளுக்கு அன்றாட உணவை வழங்கக் கஷ்டப்படும் விவசாயிகளின் நலன்களைக்கவனிப்பது யார்? தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தால் தொழிற்சாலைகள்இயங்க முடியாதநிலைமையில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் தொழிலாளர்களின் நலன்களைக்கவனிப்பது யார்? அடிக்கடி இடம் பெயர்வதனால்சீரான கல்வி பெறமுடியாது பாதிக்கப்படும் மாணவர்களுக்குத் தற்காலிக வசதிகள் செய்து கொடுப்பவர்கள் யார்?



### சிந்தியுங்கள்

ஈ.பி.டி.பி. சாதி ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம், மதபேதம், பிரதேச வாதம் என்பவற்றுக்கு எதிராகச் செயற்படும் ஒரு கட்சி ஆகும். வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும். வடக்குகிழக்கு பிரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதில் எமது கட்சி மிகவும் உறுதியான கொள்கையைக் கடைப் பிடித்து வருகின்றது.

அதனால் தான் எமது கட்சியின் சார்பில் நீங்கள் தெரிவு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி எமது அரசியல் வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதுடன் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் நாம் பாடுபட்டு வருகின்றோம். அதேவேளையில் மலையக மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு ஒரு கௌரவமான அரசில் தீர்வை எட்ட வேண்டும் என்பது தான் எமது முதன்மையான இலட்சியமாகும். அதற்காக நாடாளுமன்றத்தை நாம் இயன்றவரை பயன்படுத்தி வந்துள்ளோம்.

எமது மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை நாம் தயாரித்து சமர்ப்பித்துள்ளோம். சர்வதேச ரீதியான தொடர்புகளை தூதரகங்கள், தூதுவர்கள் மூலம் ஏற்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றோம். குறிப்பாக இந்த அரசுடன் ராஜதந்திர உறவுகளைப் பேணி வருகின்ற அதேவேளை நோர்வே நாட்டின் சமாதான முயற்சிக்கு எமது முழு ஆதரவையும் தெரிவித்து வருகின்றோம். மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் நாம் இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி தமிழ்த்தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறி வருகின்றோம்.

### மக்களின் எண்ணமே எம் எண்ணம்!

இன்று உங்கள் முன்வரும் [illegible] ஒப்பிடும் போது வயதில் எமது கட்சி இளமையானது தான். ஆனால் எமது கடந்த கால தீர்க்கதரிசனம் மிக்க அரசியல் முடிவுகளாலும் நடைமுறை வேலைகளாலும் இரத்தக்கறை படியாத கரங்களை நாம் உடையவர்கள் என்பதாலும் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, அமோக வளர்ச்சியடைந்துள்ளோம்.

எமது இதய சுத்தியான அரசியல் நடவடிக்கைக்கு ஆதார பூர்வமாக இன்று எமது அலுவலகங்களுக்குத் தினமும் வருகைதரும் நூற்றுக்கணக்கான மக்கள் தொகை சான்றுபகர்கின்றது.

இந்த மக்கள், எமது நிகழ் கால, எதிர்கால அரசியல் வேலைத் திட்டங்கள் குறித்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக கலந்துரையாடல்களையும் விவாதங்களையும் எம்மோடு நடத்துவதை பெருமையுடன் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்வாறே மக்களின் எண்ணமே எம் எண்ணம் எனும் சொல்வடிவத்திற்கு செயல் வடிவம் கொடுத்து வருகின்ற ஈ.பி டி.பி. ஏனைய போலி அரசியல்வாதிகளைப் போல் நான்கு சுவர்களுக்குள் குந்தியிருந்து குதர்க்கம் பேசாது, மக்களை நோக்கிச் செல்கின்றது, மக்களோடு மக்களாக வாழ்கின்றது.

எமது தமிழ் பேசும் சமூகத்தின் பலதரப்பட்ட மக்களிடமிருந்து அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் உள்வாங்கி ஈ.பி டி.பி. தனது செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றது. எமது மக்களின் பிரச்சினைகளை நேரடியாகச்சென்று பார்த்து, அனுபவித்து, அவற்றிற்கான உதவித்திட்டங்களை நிறைவேற்றி, அவர்களது அவலங்களை ஒழித்துக் காட்டுகின்றது.

எமது உணர்வுபூர்வமான அரசியல் வேலைகளை மனதில் கொண்டு வாக்குகளை பயனற்ற முறையில் சிதறவிடாமல் உள்ளூராட்சித் தேர்தலில் எமது கரங்களைப் பலப்படுத்தியது போல், இம்முறையும், இத்தேர்தலில் எமது வீணைச் சின்னத்துக்கு உங்கள் வாக்குகளை அளித்து ஆதரவு தருவீர்கள் என்பதில் நாம் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## ஜேர்மன் தமிழர்கள் நாளை ஆர்ப்பாட்டம்

பொன், ஒக். 9

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம் எனக்கோரி நாளை செவ்வாய்க்கிழமை மனித உரிமைகள் அமைப்பினால் ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இலங்கையின் நாடாளுமன்றத்துக்கான 11 ஆவது பொதுத் தேர்தல் நடைபெறும் நாளில் ஜேர்மனியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஜேர்மனியில் வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் 75 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் தஞ்சமடைந்துள்ளனர் இவர்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்களின் அரசியல் புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன

அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்களைதிருப்பித் அனுப்பும் நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரையும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## புலிகளுடனான தொடர்புகள் இனி பகிரங்கமாகவே இடம்பெறும்

### ஜனாதிபதி குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 9

விடுதலைப் புலிகளுடனான சகல தொடர்புகளும் இனிமேல் பகிரங்கமான முனையிலேயே மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இச்சந்திப்பில் அவர்மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மீது தாக்குதல் நடத்துவதற்கு குறி வைக்கப்பட்டுள்ளது

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூன்று வேட்பாளர்களும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களும் விடுதலைப்புலிகளினால் படுகொலைசெய்யப்பட்டிருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் விரும்பியபடி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் அனுமதி அளித்துள்ளனர்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் உறுதி செய்யப்பட்ட ஜனநாயகச்செயற்பாடுகளைக் குழப்பி அடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மௌனம் சாதித்து வருகின்றனர்.

நோர்வேயின் சமரச முயற்சிகளையும் பொருட்படுத்தாமல் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது படுகொலை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் முயற்சிகளில் அரசாங்கம் ஒரு போதும் தடம் புரளாது.

இப்படி ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆண்டில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

இராசேந்திரம் - மயூரன் - 159 புள்ளிகள்
பத்மநாதன் - தீபா - 142 புள்ளிகள்

ஆகிய இருமாணவர்களை மனமார வாழ்த்துவதுடன் வெட்டுப்புள்ளிக்கு அண்மையாகப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம். 1995 ஆம் ஆண்டின் பின்பு இடம்பெயர்ந்து பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கும் இவ் வித்தியாலயத்தில் நீண்டகாலஇடைவெளிக்குப்பின்இத்தகைய பெறுபேறுகளை மாணவர்கள் பெறுவதற்கு அடித்தளம் அமைத்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களை நன்றி உணர்வுடன் நினைவு கூருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
நலன் விரும்பிகள்.

(79298)


# வாக்காளர் அட்டை பறிப்பு

கொழும்பு, ஒக், 9

ராகலை வூட்லைன் தோட்டத்தில் உள்ள தமிழர் ஒருவரின் வீட்டிற்குள் புகுந்த ஆயுதம் ஏந்திய சிலர் வாக்காளர் அட்டைகளைப் பறித்ததுடன் வீதியிலுள்ள சுவரொட்டி ஒன்றினை அந்த வீட்டின் உரிமையாளரைக் கொண்டே கிழிக்கச் செய்துள்ளனர்.

இது தொடர்பாக ராகலை பொலீஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தமிழரான வீட்டுக்காரர் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-5)

# 7 ஆயிரம் பேர் வடமராட்சி வருகை

இம் மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையிலான ஐந்து தினங்களிலும், தென்மராட்சிப் பகுதியிலிருந்து வெளியேறிய 7 ஆயிரத்து 812பேர் முள்ளி இராணுவ முகாம் ஊடாக வடமராட்சிக்கும், வலிகாமத்துக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

கொடிகாமம், கச்சாய், எழுதுமட்டுவாள், உசன், கெற்பலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இந்தமுகாம் ஊடாக இடம்பெயர்ந்திருப்பதாக, கரவெட்டிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (ஐ 109)

# 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தென்மராட்சிப் பகுதியிலிருந்து கடந்த 3 மாதங்களுக்கு முன் வெளியேறி கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களில் சுமார் 500 பேருக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று முதல் வங்கிகள் மூலம் வழங்கப்பட உள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட ஜே-348, ஜே-349, ஜே-351, ஜே-358, ஜே-359, ஜே-360, ஜே-361, ஜே-362, ஜே-363, ஜே-364, ஜே-365, ஜே-366, ஜே-367, ஜே-368, ஜே-369, ஜே-370, ஜே-371, ஜே-372, ஜே-373, ஜே-374, ஜே-375, ஜே-376, ஜே-377, ஜே-378, ஜே-379, ஜே-380, ஜே 381, ஜே-382 ஆகிய கிராமசேவை அலுவலர்கள் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-109)


## வாழ்த்துகின்றோம்

யா /மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
148 புள்ளிகள் பெற்ற
அன்னராசா அனுஷியாவை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(79304) மாமன்: பரமசிவம் குடும்பம்.



ஸ்ரீராம ஜெயம்

## "பெயர் சூட்டு விழா"

பார்த்தனுக்கு கீதை சொன்ன பரந்தாமனின் அடியவர்களுக்கு பசி போக்கி விருந்தளிக்க அமுது வழங்கும்

## ஆதிமூல ஸ்ரீலக்ஸ்மி நாராயண அமுத சுரபி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஈசான மூலையில் அமைக்கப்பட்ட 101 அடி கொண்ட பாரிய மடத்திற்கு மேற்படி பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பூரணமாகப் பூர்த்தியாக்கப்படாத நிலையிலும் மகோற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றது. இவ்வருடமும் இப்பணியைச் செவ்வனவே செய்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு பணம் படைத்த தாராள சிந்தையுள்ளவர்கள் இயன்ற உதவிகளை வழங்கி எம் பணியைத் தொடரப் பூரண ஒத்துழைப்பை நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இம்மடத்தில் திருமண வைபவ நிகழ்வுகள், சாப்பாட்டு வசதிகள் போன்றவை ஒழுங்கு செய்து தரப்படுமென மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நிர்வாகம்,
ஆதிமூல ஸ்ரீலக்ஸ்மி நாராயண
அமுதசுரபி.
''ஈசான மடம்''
கற்கோவளம்,
பருத்தித்துறை.

துன்னாலை வடக்கு,
புலோலி.

(சி/ 13299)


# கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம் வைத்தியசாலைக்குச் சமைக்காத உணவுப் பொருள்கள் வழங்குதல் - 2001

## பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்

01. கொழும்பு 10, பத்தேகம விமலவன்ச மாவத்தை ''சுவசிறிபாய'' சுகாதார சேவைகள் திணைக்கள கேள்விச் சபையின் தலைவரினால் 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக்கு (அரிசி தவிர்ந்த) சமைக்காத உணவுப் பொருள்கள் வழங்குவதற்கான கேள்வி மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விப் படிவங்கள் பெற்றுக் கொள்ளுதல்.

கீழே காட்டப்பட்டுள்ள பெறுமதிக்குப் பொது 170 படிவத்தில் சொத்துக்கள் சான்றிதழையும், வியாபார பதிவுச் சான்றிதழையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1000 - க்கான பொது 172 படிவத்திலான பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க்காணும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

01) அரசாங்கம் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சமைக்காத உணவுப் பொருள்கள் வழங்குதல் தொடர்பான அனுபவம் மற்றும் சான்றிதழ்.
02) தொலைபேசி (குளிர்சாதனப் பெட்டிகள் உட்பட) களஞ்சிய வசதிகள் போக்குவரத்து வசதிகள் தொடர்பான விவரங்கள்.
03) கடந்த ஆறுமாத காலத்தில் வைத்திருந்த கணக்குத் தொடர்பான வங்கிக் கூற்றுகள்.
04) வர்த்தக முயற்சியாயின் மொத்த விற்பனை வரி மற்றும் பொருள்கள் சேவைகள் வரி என்பவற்றின் மீதான அறிக்கைகள்.
05) கூட்டுறவு ஆணையாளனாரின் சிபார்சு செய்யப்பட்ட பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கேவிப்படிவங்களுக்கான கொடுப்பனவுப் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

03. கேள்விப் படிவம் பெற்றுக்கொள்ள முடிவு திகதி- **25.10.2000 பி. ப. 2.00 மணிவரை**

04. கேள்விப் படிவம் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்:

**1. யாழ்ப்பாணம் பொது வைத்திய சாலை.**

**2. கொழும்பு 10, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்(நிதி) அலுவலகம்.**

05. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதலும், திறத்தலும், இடமும்.
2000.10.27 ஆம் திகதி மு. ப. 10.00 மணி கொழும்பு 10, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் (நிதி) அலுவலகம்,

06. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறியவர்களுக்கும் கறுப்புப் புள்ளிகளைப் பதிவேட்டில் இடப்பட்டுள்ளவர்களுக்கும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

07. உரிய பெறுமதிக்குப் பெறப்பட்ட கேள்விப் பிணை இணைக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் முத்திரை இடப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கேள்விச் சபைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

08. கேள்விப் பிணை ரூபா 41,000

09. சொத்துக்கள் சான்றிதழின் பெறுமதி ரூபா 344,000

10. மட்டுப்படுத்தப்பட்ட கொம்பனியானால் சொத்துச் சான்றிதழ் உட்பட சகல ஆவணங்களும் கொம்பனியின் பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

வைத்திய கலாநிதி
செல்வி நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
06.10.2000.

(சி/13301)

# கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையினால் புதிதாக அமைக்கப்பட்ட கடைகள், இரண்டினைக் குத்தகை அடிப்படையில் வியாபாரம் செய்வதற்கு வழங்குவதற்கான கேள்விகள் ''தவிசாளர்'' வேலணைப் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி — 07. 10. 2000—16. 10. 2000 வரை.
2. கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி — 18. 10. 2000.
3. கேள்வி திறத்தல். — 19. 10. 2000. மு. ப—10. 30 வரை.
4. கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 500/ம் மீளளிக்கப் படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/ உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம.
5. கேள்வி விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக ''தலைவர்'' வேலணை பிரதேச சபை, வேலணை என முகவரியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கடைகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது இச் சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.
6. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
9. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.
10. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை 1,00, 000/ ஆகும்.
11. இது சம்பந்தமான மேலதிக விவரங்களைப் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்
ந. கருணாகரகுருமூர்த்தி ஜே. பி. யூ. எம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2000 விசேட பஸ் சேவை வசதி;

தேர்தல் தினமான 10. 10. 2000 ஆம் திகதி வாக்காளர்கள் தத்தமது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் யாழ்ப்பாணம் 10 பணிப்பின் மீது வட பிராந்திய போக்கு வரத்துச் சபையால் கீழ்க் குறிப்பிடப்பட்ட பாதை ஊடாக இலவச பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. தனியார் பேருந்துகளும் பயன்படுத்தப்படும்.

★ **பேருந்து விசேட இலக்கம் 101A, 101B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** கோண்டாவில் இந்து ம. வி., நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி ஊடாக நெல்லியடி சென்று மீண்டும் அதே பாதையால் வட்டுக்கோட்டையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** வட்டுக்கோட்டை 7 மணி. 8 மணி 11மணி 12.30 மணி நெல்லியடி 9 மணி. 10 மணி, 1.30 மணி 4 மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 102A, 102B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, மானிப்பாய், மருதனார்மடம். கோண்டாவில், இருபாலை, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** வட்டுக்கோட்டை 7.30 மணி. 8.30 மணி, 12.45 மணி, 1.45 மணி, நெல்லியடி 10 மணி, 11 மணி, 3.15 மணி, 4.15 மணி.

**பேருந்து விசேட இலக்கம்:-** 103A, 103B
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவபபிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்துச் சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, மருதனார்மடம் சந்தி, உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டை திரும்பும்.
**புறப்படும் நேரம்-** வட்டுக்கோட்டை 7 மணி, 9 மணி, 11. 30 மணி, 2 மணி, நெல்லியடி-9. 15 மணி, 11. 15, மணி, 2. 10 மணி, 4. 15 மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 104A, 104B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-** சங்கானை, சிவப்பிரகாசம் வித்தி, மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்-** மூளாயில் ஆரம்பித்து சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும் நேரம்:-** மூளாய் 7 மணி, 7.30 மணி, 11.30 மணி 12.30 மணி, நெல்லியடி 9.15 மணி, 9 45 மணி. 11.30 மணி, 4.மணி

★ **பேருந்து விசேட இலக்கம் 105A, 105B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-**மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில்இந்து ம.வி, நீர்வேலி அத்தியார் இந்து. நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** மூளாயிலிருந்து ஆரம்பித்து சுழிபுரம், சித்தன் கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம்சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும்நேரம்:-** மூளாய்- 8 மணி, 9 மணி, 12.45 மணி. 1.45 மணி,நெல்லியடி- 10.10மணி, 11.10மணி, 2.55மணி, 4மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 106A,106B,**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-** மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து ,நெல்லியடிம.வி.
**பாதை விவரம்:—** இளவாலையிலிருந்து ஆரம்பித்து பண்டத்தரிப்பு, பிரான்பற்று, தொட்டிலடி, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும்நேரம்:** இளவாலை 7மணி, 7.30, மணி, 11 மணி 11. 55 மணி. நெல்லியடி 9 மணி, 9.30 மணி, 1.25 மணி, 4 மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 107A, 107B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:—** சங்கானை சிவபபிரகாசம் வித்தி. மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து ம.வி. நீர்வேலி, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவர:—ம்** இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதேபாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:—** இளவாலை- 8 மணி, 9 மணி, 1.05 மணி, 2.05 மணி, நெல்லியடி 10.20மணி, 11மணி, 3 25 மணி, 4.25மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 108A, 108B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:** மருதனார்மடம் இராமநாதன். கோண்டாவில் இந்து. ம.வி., நீர்வேலி அத்தியார் இந்து., நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்:-** தெல்லிப்பழை 7 மணி, 7. 30 மணி, 10. 40 மணி, 11. 15 மணி, நெல்லியடி 8. 50 மணி, 9. 20 மணி, 2 மணி, 4 மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 109A, 109B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து. ம. வி,. நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம். மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்-:** தெல்லிப்பழை 8மணி, 9மணி, 1மணி 1. 55 மணி நெல்லியடி 10 15 மணி 11. 15மணி 3. 15 மணி, 4.10 மணி.

★ **பேருந்து விசேட இலக்கம் 110A, 110B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி, மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம். சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி, தொட்டிலடி, சங்கானை, மானிப்பாய், தாவடி, மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி
**புறப்படும் நேரங்கள்:** தெல்லிப்பழை — 7.30 மணி, 8.30மணி 1.05மணி 2.05மணி நெல்லியடி 10 05 மணி 11.05 மணி, 4 மணி நீர்வேலி — 3.50 மணி (நீர்வேலி அத்தியார்).

★ **பேருந்து விசேட இலக்கம் 111A, 111B**
**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்-:** கோண்டாவில் இந்து ம. வி., நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம. வி.
**பாதை விவரம்:-** யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் யாழ்ப்பாணம் வந்தடையும்
**புறப்படும் நேரங்கள்:-** யாழ்ப்பாணம் — 7 மணி. 8 மணி, 10.30 மணி, 11.30 மணி, 2.25 மணி, நெல்லியடி — 8.45 மணி, 9.45 மணி, 12.40 மணி, 1.40 மணி, 4.10 மணி.

★ விசேட சேவை இலக்கம் 114
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;- கோண்டாவில் ம. மகா வித் மானிப்பாய் இந்து மகளிர், சங்கானை சிவப்பிரகாசம், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார்.
பாதை விவரம்;- வேலணை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், தாவடி, மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி. மீண்டும் திரும்பி அதே பாதையில் வேலணை
புறப்படும் நேரங்கள்:- வேலணை 7 00, 12 35,
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள் :- நெல்லியடி மத். மகா வித்தியாலயம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, பொலிகண்டி. வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி, நெல்லியடி மத்திய மகா வித். மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்;- பருத்தித்துறைப் பாதைகள் 7.00, 8.30, 10.40, 12 55, 2 45.

★ விசேட சேவை இலக்கம் 117
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நீர்வேலி அத்திபார், கோண்டாவில் ம. வித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப் பிரகாசம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமனாறு, அச்சுவேலி, நீர்வேலி, இருபாலை, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்;- 7.00, 8 00, 1.05, 1.55,

★ பேருந்து விசேட இலக்கம் 118 A. 118 B
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நெல்லியடி ம. மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானி. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை.
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, கலிகை, நெல்லியடி ம. மகா வித்தியாலயம், புறாப்பொறுக்கி, அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரங்கள்:- 7 00. 8 00, 11.30, 12.55.

★ பேருந்து விசேட சேவை இலக்கம் 119A, 119B
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார், கோண்டாவில் மகாவித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம்.
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி, அச்சுவேலி, நீர்வேலி, இருபாலை, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:- பருத்தித்துறையிலிருந்து 7-00,8-00,11-30,12-55

★ விசேட சேவை இலக்கம் 120
இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- குடத்தனை அ.த.க. பாடசாலை. குடத்தனை கரையூர் அ.மி த.க. பாடசாலை.
பாதை விவரம்:- பருத்தித்துறை. தும்பளை, கற்கோவளம், வல்லிபுரம். குடத்தனை, மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை,
புறப்படும் நேரம்:- பருத்தித்துறையில் இருந்து 7-00, 9-05, 12-00, 3-15

★ பேருந்து விசேட சேவை இலக்கம; 121
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- குடத்தனை அ. த க. பாடசாலை குடத்தனை கரையூர் அ. மி, த. க. பாடசாலை
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, உபயகதிர்காமம், வல்லிபுரம், குடத்தளை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம்:- பருத்தித்துறை 8-00, 10-30, 1-45

★ பேருந்து விசேட சேவை இலக்கம்:- 122
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தும்பளை சிவ. மகா வித்தியாலயம்.
பாதை விவரம்:- அம்பன், குடத்தனை, வல்லிபுரம், தும்பளை மீண்டும் அதே பாதையில் அம்பன்
புறப்படும் நேரம்:- அம்பன் 7-00, 9-00, 11-10, 1-45

★ பேருந்து விசேட இலக்கம்:- 123A 123B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
பாதை விபரம்;- யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை மீண்டும் அதேபாதையில் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம்:- 7-00, 9-20, 11-40, 2-25, 8-00 10-20 1-05

★ பேருந்து விசேட சேவை இலக்கம் 124A 124B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம் தெல்லிப்பழை புனர்வாழ்வு
பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, கலிகை, நெல்லியடி அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், சுன்னாகம், தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:- பருத்தித்துறை 7-00, 8-00, 11-00, 12-25

★ பேருந்து விசேட இலக்கம்:- 12 5A, 125B
இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:- தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
பாதைவிவரம்;- பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, அச்சுவேலி, கோப்பாய், மருதனார்மடம், சுன்னாகம், தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:- 7-00, 8-00, 11-00 12-25

(VIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல் - 2000
# வாழ்த்துகிறோம்

எமது நண்பன்

## சதாசிவம் ஐங்கரன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேசிய பட்டியலில் முதன்மை வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம். தேர்தலில் வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**யாழ்., வலிகாமம் ஆசிரிய நண்பர்கள்.**

(79311)

# ஆசானை வாழ்த்துகிறோம்

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வழியில் மாணவர் பிரதிநிதியாய் தமிழர் மானம் காக்கப் புறப்பட்ட மறத்தமிழன்

## சதாசிவம் ஐங்கரன்

அவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தேசியப் பட்டியலில் முதன்மை வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதை இட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை வெற்றி பெறச் செய்யுமாறு மக்களை வேண்டுகிறோம்:

மாணவர்கள்,
வட்டுக்கோட்டை.

(79312)

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்)

மதிக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியே தேர்தலில் பெரு வெற்றி பெறப் போகிறதென்பதை அறிந்த இவ்வியாபார சக்திகள் த. வி. கூட்டணிக்கும், கூட்டணியின் வேட்பாளர்களுக்கும் களங்கம் ஏற்படுத்தக் கூடிய புரளிகளைத் தூண்டும் பிரசாரத்தில் வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். தேர்தல் பிரசாரம் இறுதிக் கட்டத்திலிருக்கும் போது வதந்திகளைக் கிளப்பி விடுகிறார்கள். இச்சக்திகளின் சதி முயற்சிகளுக்கும் புரளிகளுக்கும் தமிழ் மக்களும், த.வி. கூட்டணித் தொண்டர்களும் பலியாக மாட்டார்களென நம்புகிறேன்

இன்று 20 கட்சிகளும், சுயேச்சைகளும் தேர்தல் களத்தில் நின்று தமிழ் மக்கள் வாக்குகளைப் பிளவுபடுத்துகின்றார்கள். நிச்சயமாக மிகப் பெரும்பாலான கட்சிகளும், சுயேச்சைகளும் 5 வீத வாக்கைக் கூடப் பெற மாட்டார்கள். இவை நிராகரிக்கப்பட்டுவிடும். இக்கட்சிகளையும், சுயேச்சைகளையும் நிராகரித்துவிட்டு த.வி. கூட்டணியின் சின்னம் உதய சூரியனுக்கே வாக்குகளைக் குவிக்குமாறு வேண்டுகிறேன். இனப்பிரச்சினைக்கு முழுமையான அரசியல் தீர்வு வேண்டும்— தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்தி எட்டும் அரசியல் தீர்வை நிறைவேற்ற வேண்டும் இக் கொடிய போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம். இப்பணியைத் தொடர அரைகுறைத் தீர்வையும், இராணுவத் தீர்வையும் நிராகரித்து தமிழ்மக்களின் விடிவுக்காக மீண்டும் தம்மை அர்ப்பணிக்க வந்துள்ள த. வி. கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுமாறு தமிழ் வாக்காளப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன். ★

# உரும்பிராய் லயன்ஸ் கழகம்
## உரும்பிராய்
# அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசுக்குரிய இலக்கம் – 1787
2 ஆம் பரிசுக்குரிய இலக்கம் – 1875
3 ஆம் பரிசுக்குரிய இலக்கம் – 399

கடந்த 08-10-2000 அன்று நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசுபெற்ற மேற்கண்ட இலக்கங்களுக்கான பரிசுக்குரியவர்கள் அதற்கான சீட்டுடன் அடையாள அட்டையையும் காண்பித்து 15-10-2000 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும் கழக மாதாந்தக் கூட்டத்தில் உரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**லயன் வ. ஆறுமுகம்**
தலைவர்

**லயன் அ. க. த. கிருஷ்ணராஜா**
செயலாளர்

(சி/13310)

## நாடாளுமன்றத்...

(VII ஆம் பக்கத் தொடர்)

★ பேருந்து விசேட சேவை இலக்கம்:– 126

இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:– நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

பாதை விவரம்:- பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை

புறப்படும் நேரம்:– பருத்தித்துறை 7-00, 8-10, 9-20, 10-30 11-40, 1-35

★ பேருந்து விசேட சேவை இலக்கம்: 127

இணைக்கும் வாக்களிப்பு நிலையம்: நெல்லியடி மகா வித்தி.

பாதை விவரம்: நெல்லியடி ம. மகா வித்தி, குஞ்சர் கடை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், வதிரி, நெல்லியடி ம. மகா வித்தி. (வட்ட ஓட்டப் பாதை)

புறப்படும் நேரம்: நெல்லியடி மகா வித்தி. 7.00, 8.15, 9.30 10.45, 12.55, 2.10

★ பேருந்து விசேட இலக்கம் 112A, 112B

இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- நீர்வேலி அத்தியார், நெல்லியடி மகாவித்தியாலயம்.

பாதை விவரம்:– யாழ்ப்பாணம் நல்லூர், கல்வியங்காடு, நீர்வேலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, நெல்லியடி மீண்டும் அதே பாதையில் திரும்பி யாழ்ப்பாணம்.

புறப்படும் நேரம்:– யாழ்ப்பாணம் 7-30, 11-00, 2-55, 8-30, 12-30

★ பேருந்து விசேட இலக்கம் 113A, 113B

இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:- கோண்டாவில் மத்திய மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

பாதை விவரம்:- யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, கோண்டாவில், தாவடி, மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்கானை மீண்டும் திரும்பி அதே பாதையில் யாழ்ப்பாணம்.

புறப்படும் நேரம்:- 8-00, 9-00, 11-10, 12-35, 2-25

★ தீவகத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு வசதியாக யாழ். பேருந்து நிலையத்திலிருந்து பின்வருமாறு வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1) யாழ்.—> வேலணை — குறிகாட்டுவான்
நேரம்:- 8-12
2) யாழ்.—> ஊர்காவற்றுறை
நேரம்:- 8-12
3) யாழ்.—> மண்டைதீவு
நேரம்:- 8-12
4) யாழ்.—> அராலி—பொன்னாலை—காரைநகர்
நேரம்:- 8-12

# வாக்களிப்பு நிலையங்களின் விவரம்

## நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
### சாவகச்சேரி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| கைதடி குருசாமி வித்தி. | 01 | 1-1730 |
| கைதடிமுத்துக்குமாரசாமிவித் | 02 | 2-1196 |
| கைதடி விக்கினேஸ்வரா வித் | 04 | 1-2001 |

## உடுவில் இராமநாதன் கல்லூரி
### சாவகச்சேரி பிரிவு

| | | |
|---|---|---|
| கைதடி முத்துக்குமாரசாமிவித் | 03 | 1-1348 |
| நாவற்குழி மகா வித் | 05 | 1-1218 |
| நாவற்குழி மகா வித் | 06 | 1-1408 |
| மறவன்புலோ சகலகலாவல்லி வித் | 08 | 1·1431 |
| தனங்களப்பு அ.த.க. பாட | 09 | 1- 603 |
| நுணாவில் மேற்கு அ.த.க. பாட | 15 | 1-1864 |
| நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 16 | 1-1152 |
| கைதடி நுணாவில் அ.த.க. பாட | 21 | 1-1794 |
| மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாட | 22 | 1-1828 |

## கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
### கிளிநொச்சி பிரிவு

| | | |
|---|---|---|
| பளை மகா வித் | 01 | 1- 727 |

## சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
### சாவகச்சேரி பிரிவு

| | | |
|---|---|---|
| நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 17 | 1-1488 |

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
### சாவகச்சேரி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 10 | 1-1512 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 11 | 1-1729 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 28 | 2-1276 |
| மீசாலை வீரசிங்கம் மகா வித் | 29 | 1-1356 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 12 | 1-1139 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 13 | 1-1154 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 20 | 1-1192 |
| கல்வயல் சண்முகநாதன் வித் | 14 | 1-1431 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 18 | 1-1830 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 19 | 1-1377 |
| சந்திரபுரம் சாந்தநாயகி வித் | 23 | 1-1117 |
| மட்டுவில் சமலாசனி வித் | 24 | 1- 952 |
| மட்டுவில் சந்திரமௌளீச வித் | 25 | 1-1148 |
| சரசாலை தெற்கு சரஸ்வதி வித் | 26 | 1-1229 |
| சரசாலை கணேசா வித் | 27 | 1-1082 |
| கொடிகாமம் திருநாவுக்கரசு | 30 | 1-2503 |
| கொடிகாமம் திருநாவுக்கரசு | 33 | 1-1321 |
| விடத்தல்பளை கமலாசனி வித் | 31 | 1-1228 |
| கச்சாய் அ.த.க. பாடசாலை | 32 | 1-1459 |
| கொடிகாமம் அ.த.க. பாடசாலை | 34 | 1-1575 |
| எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க. பாடசாலை | 35 | 1- 668 |
| எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா | 36 | 1-1206 |
| உசன் இராமநாதன் மகா வித் | 37 | 1- 378 |
| உசன் இராமநாதன் மகா வித் | 38 | 1- 681 |
| வரணி சைவப்பிரகாச வித்தி | 39 | 1-1011 |
| கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை | 40 | 1- 952 |
| வரணி மகா வித்தியாலயம் | 41 | 1- 635 |
| நாவற்காடு கணபதிப்பிள்ளை த.க. பாட | 42 | 1-1218 |
| வரணி மகா வித்தியாலயம் | 43 | 2-2009 |
| வரணி மகா வித்தியாலயம் | 44 | 1-2112 |

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
### கிளிநொச்சி பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| வேம்பொடுகேணி மகா வித் | 03 | 1- 850 |
| வேம்பொடுகேணி மகா வித் | 07 | 1- 905 |
| வேம்பொடுகேணி மகா வித் | 08 | 1- 581 |
| பளை மகா வித் | 04 | 1-1930 |
| கிளாலி றோ.க.த.க. பாட | 02 | 1- 589 |
| சோரன்பற்று கணேசா வித் | 06 | 1-1246 |

## தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
### பருத்தித்துறை.

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|
| நாகர்கோயில் அ.மி.த.க-பா. | 28 | 1-1347 |
| செம்பியன்பற்று அ.மி.த.க பா. | 29 | 1-1102 |
| தாளையடி றோ.க.த.க பா. | 30 | 1- 670 |
| மருதங்கேணி இ.த.க. பா. | 31 | 1- 947 |
| உடுத்துறை பாரதி ச.ச.நி. | 32 | 1- 899 |
| ஆழியவளை . கி இ.த.க. பா. | 33 | 1- 503 |
| வெற்றிலைக்கேணி பர. | 34 | 1- 891 |
| போக்கறுப்பு றோ·க.த.க, பா, | 35 | 1- 252 |
| சுண்டிக்குளம் உப தபால் அலு | 36. | 1- 16 |

சாவகச்சேரி, கிளிநொச்சி வாக்கெடுப்பு பிரிவுகளில் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வசதிகருதி அவர்களின் மாற்றப்பட்ட வாக்களிப்பு நிலையமும் அவற்றில் உள்ள அவர்களின் வழமையான வாக்களிப்பு நிலையங்களின் விவரங்களும் வாக்கெடுப்பு மாவட்ட இலக்கமும் அவற்றிலுள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைக்குரிய தொடர் இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி
### கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| பளை மகா வித்தி. | 05 | 01-1315 |

## மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி
### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| கோயிலாக்கண்டி மகா. வித். | 07 | 01- 507 |

**தெரிவத்தாட்சி அலுவலர்,**
**யாழ். தேர்தல் மாவட்டம்,**
**இலக்கம் 10** (சி/13303)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org